# நம் வழி வேளாண்மை

பருவம் 26 அக்டோபர் – டிசம்பர் 2016 இதழ் 3



சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் டிசம்பர் மாதம் 28, 29 2016 தேதிகளில் நடைபெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்கள், அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியை பார்வையிட்ட கடலூர் மாவட்ட ஆட்சியர்

## இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

# நம்வழி வேளாண்மை

பருவம் 26 அக்டோபர் – டிசம்பர் 2016 இதழ் 3

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**

### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

### நம்வழி வேளாண்மை குழுமம்
### பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,
**Honey Bee,**
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

## சிற்பியின் புத்திசாலித்தனம்

சேலம் மேட்டூர் அணை கட்டுமுன்பு ஆலம்பாடி என்ற ஒரு கிராமம் இருந்தது. இந்த அணை கட்டிய பின் இந்த கிராமம் அநேகமாக முற்றிலும் அழிந்து விட்டது. இங்கு சிலை வடிக்கும் சிற்பி ஒருவன் வாழ்ந்து வந்தான். இந்த சிற்பி நேர்மைக்கும் தொழில் திறமைக்கும் பெயர் பெற்றவன். இவ்வூரில் பல பெண்களுக்கு பிறந்த குழந்தைகள் எல்லாம் சிற்பியின் முகத் தோற்றத்துடன் திகழ்ந்தன. இதனைப் பார்த்த ஊர் மக்கள் சிற்பியின் தொடர்பினால் பெண்களுக்கு சிற்பியைப் போன்ற பிள்ளைகள் பிறந்திருக்க வாய்ப்புண்டு என்று சந்தேகப்பட்டனர். சிற்பியைக் கண்டிக்க முற்பட்டனர். ஊரார் சிற்பியைக் கயிற்றினால் கட்டி அடிக்க ஆரம்பித்தனர். இச்சமயம் சிற்பி சவுக்கடியிலிருந்து தப்பிக்க அவனுக்கு ஒரு யோசனை உதயமானது. உடனே அவன் கீழ்கண்டவாறு கூற ஆரம்பித்தான்.

தான் நிராபராதி என்பதை உணர்த்த தனக்கு அவகாசம் தரும்படி கெஞ்சினான். இதற்கு ஊர்காரர்கள் ஒத்துழைப்பு தர முன் வந்தனர். இதன்படி இந்த சிற்பி ஒரு மாட்டு சிலையை உருவாக்குவான். பின்னர் இங்குள்ள பசுமாடுகளுக்கு பிறக்கும் கன்றுக்குட்டிகளை ஒப்பிடச் சொன்னான். இதற்குப்பின்னர் இவ்வூரிலுள்ள பசுக்கள் அனைத்தும் இவன் செதுக்கிய மாட்டின் உருவம் கொண்டு பிறந்தனவாம். இதைப்பார்த்து ஆச்சரியம் கொண்ட ஊர் மக்கள் சிற்பியை துன்புறுத்தாது புகழ்ந்தனர். இந்த சிலை வடிவம் அகன்ற கொம்புகளுடன் மாதேஸ்வரர் கோவிலில் (கர்நாடகா மாநிலம்) உள்ளதாகக் கூறுகின்றனர். இதனையே கர்நாடாகவில் இதற்கு ''ஆலம்பாடி'' என்ற மாட்டு இனம் என அழைக்கின்றனர். இந்த மாட்டு இனம் முற்றிலும் அழிந்து விட்டது. இந்த இனத்தை கர்நாடக மாநிலத்தில் கொள்ளேகல் பகுதியில் திரு. சிவண்ணாதம்பிடி மட்டும் தங்கள் குடும்பத்தில் பல தலைமுறைகளாக பாதுகாத்துவருகிறார்.



––– (பேராசிரியர் குமாரவேல், பர்கூர் மாட்டு இன ஆராய்ச்சி மையம், அந்தியூர் சொல்லக்கேட்டது)

## ஜெயப்பிரகாஷின் பசுந்தழை உரம் தயாரிக்கும் இயந்திரம்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தாலுகா, நாமகிரிபேட்டை, அரியாகுழந்தை புதூர் எரங்காட்டில் திரு. ஜெயப்பிரகாஷம் (வயது 65) வசித்து வருகிறார் . இவர் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு ஒரு மகன் ஒரு மகள். இவரது மகன் பி.இ. முடித்து விட்டு ஒரு தனியார் கம்பெனியில் பணிபுரிகிறார். இவரது மகள் எம்.எஸ்.சி பிஎட் முடித்து டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுதப்படித்துக் கொண்டுள்ளார். இவருக்கு 11/2 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதில் வழக்கமாக மரவள்ளி கிழங்கு, வாழை, மஞ்சள், வெங்காயம் பயிரிட்டு வருகிறார்.

இவரது தந்தை விவசாயக் கருவிகளை செப்பணிடுவது, தேவைக்கேற்ப கருவிகளை மாற்றியமைப்பது, தேவைக்கேற்ப புதிய கருவிகளை வடிவமைப்பது போன்ற வேலைகளை வழக்கமாக கொண்டவர். இவர் தந்தை அது போன்ற வேலைகளில் ஈடுபடும் போது இவர் அவ்வேலைகளை உன்னிப்பாகக்கவனிப்பார். இவர் இயந்திர வேலைகளில் ஆர்வம் கொண்டவர். இதனால் தனது பள்ளிப்படிப்பை 9 ம் வகுப்புடன் நிறுத்தி விட்டு லேத் பட்டறை வேலையில் ஈடுபட்டார். இவரும் இவரது தந்தையைப்போன்றே விவசாய கருவிகளை மேம்படுத்துவதிலும் வேறு கருவிகளை உருவாக்குவதிலும் ஈடுபட்டார். இவர் முதலில் இரண்டு சக்கர புல்லட் விசை கொண்டு உழவு மற்றும் களை எடுக்கும் இயந்திரத்தை உருவாக்கினார். பின்பு மரவள்ளி கிழங்கு விதை கரணை வெட்டும் கருவி, குழி போடும் கருவி, நடமாடும் சொட்டு நீர் பாசன கருவி போன்ற கருவிகளை வடிவமைத்து தனது நிலத்தில் பயன்படுத்தி வந்தார். இவர் இப்போது பசுந்தழை உரம் தயாரிக்கும் கிழங்கு குச்சி அரைக்கும் இயந்திரத்தினை வடிவமைத்துள்ளார்.

### பசுந்தாள் உரம் தயாரிக்கும் (கிழங்கு குச்சி அரைக்கும் ) இயந்திரம்

பொதுவாக மரவள்ளி கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகள் அக்கிழங்கு குச்சிகளை விதை கரணைகளுக்கு எடுத்த போது மீதமுள்ள குச்சிகளை மாடுகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்துவது வழக்கம். மேலும் மீதமுள்ள குச்சிகள் வீணாக வயலில் எரிந்து விடுவர். இக்குச்சிகளை மாடுகள் விரும்பி சாப்பிடும். இக்குச்சிகள் மாடுகளுக்கு மிகவும் சத்துள்ளதாக இருக்கும்.



இவர் மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தியதுபோக மீதமுள்ள குச்சிகளை நிலத்திற்கு உரமாக பயன்படுத்த எண்ணி இவர் கிழங்கு குச்சிகளை அரைக்கும் இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்.

இவ்வியந்திரம் டிராக்டர் பின்புறமுள்ள பிடிஓ சாப்டு (PTO Shaft) மூலம் இயக்கப்பட்டு கிழங்கு குச்சிகளை அரைக்கிறது. இது இக்குச்சிகளை ஒரு மணி நேரத்திற்கு இரண்டு டன் துகள்களாக அரைத்து விடுகிறது.

பயன்கள்:

இவ்வியந்திரத்தின் மூலம் கிழங்கு குச்சிகள் மற்றும் வேறு தழைகளையும் அரைத்து, பசுந்தழை உரமாக நிலத்திற்கு இடலாம் என்று கூறுகிறார். இந்த கிழங்கு குச்சிகளை அரைத்து நிலத்திற்கு போடுவதால்

அக்குச்சியில் உள்ள தக்கை அதாவது குச்சி தண்டு, நடுவில் உள்ள சேறு நிலத்திற்கு தேவையான ஈரத்தை, தேக்கி வைத்து கொள்கிறது. இந்த கிழங்கு குச்சிகள் சிறந்த உரமாகப் பயன்படுகிறது. நிலத்து மண் இறுகாமல் நிலத்திற்கு நல்ல காற்றோட்டம் கிடைக்கின்றது. இந்நிலத்தில் பயிரிடப்படும் பயிர்கள் நல்ல வறட்சி தாங்கி வளர ஏதுவாக உள்ளது. மேலும் நிலத்திற்கு இடப்படும் வேறு உரத்தை உறிஞ்சி வைத்து கொள்கிறது. இக்குச்சிகள் அல்லாமல் வேறு வீனாக வளரும் பசுந்தழைகளையும் அரைத்து வயலுக்கு பசுந்தழை உரமாக இடலாம். இதன் மூலம் நிலத்திற்கு நல்ல இயற்கை உரம் கிடைக்கின்றது. இதனால் செயற்கை உரத்தை குறைக்கலாம். இவ்வியந்திரத்தை தேவைபடுகின்ற இடத்திற்கு டிராக்டரில் இணைத்து எடுத்து சென்று கிழங்கு குச்சிகள் மற்ற தேவையற்ற

தழையை அரைத்து நிலத்திற்கு இயற்கைப் பசுந்தழை உரமாக இடலாம். இது போன்று கிழங்கு குச்சிகள், தழைகள் ஆகியவற்றை துகள்களாக அரைத்து ஏக்கருக்கு 10 டன் என்ற விகிதத்தில் நிலத்திற்குத் இடலாம். இக்கிழங்கு குச்சி உரத்தினால் மகசூல் கூடுகிறது. இவ்வியந்திரத்தினால் அரைக்கப்படும் குச்சிகள் 2–3 செ.மீ துகள்களாக இருக்கும். இக் கருவியினை வடிவமைக்க ரூ. 75,000/ தேவைப்படுகிறது.

**கம்பி வளைவை நேராக்கும் இயந்திரம்**



இவர் மேலும் பழைய கம்பிகளை நேராக சரி செய்யும் இயந்திரம் ஒன்றையும் வடிவமைத்து வருகிறார். இவ் வியந்திரம் 1/2 ஹெச்பி மோட்டார் மூலம் இயக்க வல்லது. இதன் மூலம் பழைய வளைந்த கம்பிகளை மணிக்கு 200 கிலோ வளைவை எடுக்கலாம். பொதுவாக 2–3 இரும்பு கம்பிகள் சிமெண்ட், ஜன்னல்கள் (கிராத்கள்) குழாய்கள், பிளேட்டுகள் தயார் செய்ய பயன்படுத்தப்படுகிறது. இந்த வேலையில் தற்சமயம் நூற்றுக்கணக்கான பெண்கள் கையால் தட்டி சரி செய்கின்றனர். இவ்வியந்திரம் இன்னும் முழுமையடையவில்லை.

எஸ். ஜெயபிரகாஷம்
த/பெ. செங்கோட்டுவேல்
எரங்காடு, அரியாகுழந்தை புதூர்
அரியா கவுண்டன்பட்டி அஞ்சல்
நாமகிரிபேட்டை வழி
இராசிபுரம் தாலுகா
நாமக்கல் மாவட்டம்
செல் : 9486541536

## சதீஷ்குமாரின் ஆழ்குழாய் கிணறு ஸ்கேனிங் கருவி



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தாலுகா, ஜேடர்பாளையத்தில் திரு.சதீஷ்குமார் (வயது 33) வசித்து வருகிறார். இவர் எம்.சி.ஏ கம்யூட்டர் அறிவியல் படித்துள்ளார். இவரது மனைவி மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார். இவருக்கு ஒரு மகன், இரண்டாம் வகுப்பு படிக்கின்றார்.

இவர் தனது கல்லூரி படிப்பை முடித்துவிட்டு ஒரு தனியார் கம்பெனியில் பணிபுரிந்தார். பின்பு ஒரு தனியார் மேல்நிலைபள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார். பின்பு தனியார் கல்லூரியில் விரிவுரையாளராக பணிபுரிந்தார். இவர் மேற்கொண்ட பணிகளில் போதுமான ஊதியம் இல்லாததால் அவ்வேலைகளில் அவர் தொடர இயலவில்லை. சரியான வேலை கிடைக்கததால் சொந்தமாக தொழில் துவங்கலாம் என்று எண்ணி தனது சொந்த 31/2 ஏக்கர் நிலத்தில் மஞ்சள், மரவள்ளி கிழங்கு போன்ற பயிர்களை பயிர்செய்து வந்தார். ஓய்வு நேரங்களில் ஏதேனும் கருவிகளை வடிவமைக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார்.

**ஆழ்குழாய் கிணறு ஸ்கேனிங் கருவி**

ஆழ்குழாய் கிணறு அமைக்கும்போது பாறை மாற்றம், நீரூற்று இல்லாதது, நீர் வரத்து மண் படிம அடுக்கு தெரியாமல் குழாய் இறக்கி தண்ணீர் கிடைக்காமல் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டி வரும். இதனால் ஆழ்குழாய் கிணறு அமைப்பவர்களுக்கு வீன் சிரமங்கள், பண விரயம் ஏற்படுகிறது. அப்படி குழாய் இறங்கும்

போது அல்லது எடுக்கும் போது குழாய்கள் மாட்டிக் கொண்டு திரும்ப எடுக்க முடியாமல் போய் விடும். மேலும் மோட்டாரை உள்ளே இறக்கும் போதோ அல்லது எடுக்கும் போதோ மோட்டார் பாறை இடுக்குகளில் மாட்டிக் கொள்வதுமுண்டு. இது போன்ற சிரமங்களை நிவர்த்தி செய்யவும் கிணறுகள் உள்ளே மண் அமைப்பு, மற்றும் பாறை அமைப்புக்குத் தகுந்தாற்போல் கிணறு இறக்கும் வேலையைத் துரிதப்படுத்தவும், வீன் சிரமம் மற்றும் பண விரையத்தைத் தடுக்கவும், ஆழ்குழாய் கிணறுகளின் உள்ள குறைகளை கண்டறிய ஒரு கருவியை வடிவமைக்க எண்ணினார். அவ்வாறு போர்வெல் ஸ்கேனிங் கருவியை வடிவமைத்து "அருள்மிகு பண்ணையம்மன் போர்வெல் ஸ்கேனிங்" என்ற பெயரில் செயல்படுத்தி வருகிறார். இதன் மூலம் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் போது ஏற்படும் மாற்றங்கள், சிரமங்கள், தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்ற நிலைகள் போன்றவற்றை அறிந்து அதற்கேற்றாற் போல் செயல்படலாம்.

இக்கருவியில் ஒரு 1000–2000 அடி வரை கேபிள் வயரின் நுனியில் கேமரா உள்ளது. மறு முனையில் ஒரு லேப்டாப் கம்ப்யூட்டர் உள்ளது. இக்கருவியின் மூலம் 1000–2000 அடி ஆழம் வரை கேமராவை உள்ளே அனுப்பி உள்ளே உள்ள மண் அமைப்பு, பாறை அமைப்பு மற்றும் நீர் வரத்து போன்றவற்றை படமெடுத்து மேலே உள்ள லேப்டாப் கம்ப்யூட்டரில் பதிவு செய்து பார்க்கலாம்.

இக்கருவியின் பயன்கள் :

1. பாறை மாற்றம் அதாவது கறுப்பு பாறை (கடினமான பாறை ) மற்றும் வெங்கச்சாங்கல் பாறை (மிருதுவான பாறை) இருக்கிறதா என்றறியலாம். கருப்பு பாறை தென்பட்டால் தண்ணீர் இருக்காது என்றும் வெங்கச்சாங்கல் பாறை இருந்தால் தண்ணீர் வரத்து இருக்கும் என்றும் அறியப்படுகிறது.

2. நீர் ஓட்டம் அல்லது நீர் வரத்து எப்பக்கம் இருக்கிறது என்று அறியலாம்.

3. நீர் மட்டம் மற்றும் பாறை அமைப்பைக் கண்டறியலாம்.

4. ஊற்றின் அளவு மற்றும் அதன் வேகத்தை கண்டறியலாம்.

5. மண் படிம அடுக்கு மற்றும் தன்மை போன்றவற்றை அறியலாம்.

6. செம்மூட்டின் (உப்பு படிமன்) நிலை கண்டறியலாம்.

7. எந்தெந்த இடத்தில் எவ்வளவு தூரம் குழாய் (Inner casing ) போட வேண்டும் அல்லது இன்னர் கேசிங் குழாய் தேவையில்லை என்பதைக் கண்டறியலாம்.

8. ஆழ்குழாய் துளை போட்ட பின் குழாய் அல்லது மோட்டார் இறக்குவதற்கு பாதை சரியாக உள்ளதா அல்லது பாறைகளில் குறுக்கே கடினமான பாறை அல்லது கல் இருக்கிறதா எனவும் கண்டறியலாம்.

9. எந்த பக்கத்திலிருந்து நீர் வரத்து அல்லது நீர் ஊற்று உள்ளது என்பதை அறிந்து அதற்கு தகுந்தாற்போல் செயல்படலாம்.

10. இக்கருவியினை வடிவமைக்க ரூ. 65,000/ ஆகிறது.

11. இதுவரை இரண்டு வருடத்தில் சுமார் 1000 ஆழ்குழாய் கிணறுகளை ஸ்கேனிங் செய்துள்ளார்.

பி.எஸ். சதீஷ்குமார்
3/232, வேங்காத்தார் தோட்டம்
தொ. ஜேடர்பாளையம் அஞ்சல், இராசிபுரம் தாலுகா
நாமக்கல் மாவட்டம் – 637406
செல் : 9486025034

## உம்பளச்சேரி மாட்டு இன மூலம் முன்னேறிய குடும்பம்

நாகப்பட்டிணம் மாவட்டம், வேதாரண்யம் தாலுகா, உம்பளச்சேரி கிராமத்தில் வசிப்பவர் இராமசாமி (வயது 74). இவர் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 2 மகன், 3 மகள் உள்ளனர். இவர் விவசாயம் மற்றும் பாரம்பரிய மாடு வளர்ப்பு தொழிலை செய்து வருகிறார். இவரது இரண்டு மகன்களும் இதே தொழிலை செய்து வருகின்றனர். நாகப்பட்டிணம் மாவட்டத்தில் பாரம்பரிய நாட்டு மாடான உம்பளச்சேரி இன மாடுகளை இவரது தாத்தா காலத்திலிருந்தே பராமரித்து வருகின்றனர்.

இவரது தாத்தா ரூ 80 க்கு ஓர் உம்பளச்சேரி "ஆட்டுக்காரி" இன மாட்டை வாங்கி வளர்க்க ஆரம்பித்தாதாக இவரது தந்தை இவருக்கு சொல்லியுள்ளார். உம்பளச்சேரி இன மாடுகளில் ஆட்டுக்காரி மாடு, கணபதியாள் மாடு, வெண்ணமாடு, சூரியங்காட்டு மாடு, என நான்கு வகைகள் உண்டு. இந்த ஆட்டுக்காரி ரக மாடுகளையே இன்று வரை பராமரித்து வருகிறார். இம்மாட்டின் பிரத்யோக அடையாளம் நெற்றி பொட்டு, வெண்குளம்பு, வெடிவால் என்பதாகும். இதில் ஆட்டுக்காரி மாடு சற்று உடல் அடக்கமாக அதன் மேல் முடி நைசாக இருக்கும்.

### குடும்ப செழிப்பு

உம்பளச்சேரி மாடு வளர்ப்பின் மூலமே இவர்களது குடும்பம் வளர்ச்சிக்கு வந்துள்ளது. இவர்கள் ஆரம்பத்தில் 11/2 ஏக்கர் நிலமும் 2 உம்பளச்சேரி ஆட்டுக் காரி மாடு மட்டுமே வைத்து இருந்தனர். அதிலிருந்து

மாடு வளர்த்து, காளை கன்றுகளை விற்று, பின்பு நிலம் வாங்குவது, மாட்டு சாணத்தை விவசாயத்திற்கு பயன்படுத்துவது இவர்களது பாரம்பரிய முறையாக இருந்து வருகிறது. இவர் நல்ல காளை கன்றுகளை தேர்வு செய்து பொலி காளையாக வளர்த்து கிடை சேர்த்து பராமரித்தும் வந்துள்ளார். உம்பளச்சேரி இன மாடு 9 முறை கன்றுகள் ஈனும் . பசு மாடு கன்று போட்ட 4 மாதங்கள் கழித்து காளைக்கு போட்டு வருவதாகவும் பால், மஞ்சள் நிறமாக மாறியவுடன் பால் கறப்பதை நிறுத்தி விடுவதாகவும் கூறுகிறார். பாலை கன்றுகளுக்கு அதிகமாக கொடுக்கின்றார். வீட்டு உபயோகத்திற்கு மட்டுமே பாலை பயன்படுத்துவதை தவிர விற்பது கிடையாது . காளை கன்றுகள் 3 வருடத்தில் பொலி காளையாக வளர்ந்து விடும். கிடேரி கன்றுகள் 2 வருடத்தில் பலனுக்கு வந்து விடும் என்று தெரிவிக்கின்றார்.



இவர் உம்பளச்சேரி ஆட்டுகாரி இன மாடுகளை மட்டுமே பாரம்பரியமாக 75 வருடங்களில் 4 வது தலைமுறையாக குடும்பத்தில் பராமரித்து வருகின்றனர். இவரிடத்தில் 5 பசு மாடுகளும் 2 காளை கன்றுகள், 2 பசு கன்றுகள் உள்ளன. இவரது மூத்த மகனிடம் 14 மாடுகள் 6 கன்றுகள் உள்ளன. இவரது இளைய மகனிடம் 6 பசுமாடு, 3 கன்றுகள் உள்ளன. இவரது குடும்பத்திற்கு மொத்தம் 25 ஏக்கர் விவசாயம் நிலம் உள்ளது. இவரது மகன்கள் இருவரும் மாடி வீடு கட்டி வசித்து வருகின்றனர். இவர்களது குடும்ப வளர்ச்சிக்கு இந்த உம்பளச்சேரி இன மாடு பராமரிப்பே காரணம் என்று இவர் கூறுகிறார். அதிகமான உம்பளச்சேரி இன மாடுகள் இவர்களிடத்தில் தான் உள்ளன.

கோ. இராமசாமி
த/பெ. கோவிந்தசாமி
மாரியம்மன் கோயில் தெரு,
உம்பளச்சேரி அஞ்சல்
வேதாரண்யம் தாலுகா, நாகப்பட்டிணம் மாவட்டம்
செல் : 8270106580

## சண்முகவேலின் கால்நடை வைத்யம்



சண்முகம் செட்டியார் (வயது 60) ராசிபுரம் அருகே மங்களபுரம் கிராமத்தில் விவசாயம் மற்றும் கால்நடை வைத்தியம் செய்து வருகிறார். இவர் 31/2 ஏக்கரில் வாழை, மஞ்சள், மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்து வருகிறார். இவர் கால்நடைகளுக்கு மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவர் கடைபிடிக்கும் மூலிகை வைத்யம் பின்வருமாறு:

**குந்து நோய்க்கு (காய்ச்சல்)**

வேலிப்பருத்தி ஒரு கைப்பிடி அளவு, தும்பை ஒரு கைப்பிடி அளவு, முள்ளிண்டு செடி ஒரு கைப்பிடி அளவு, குப்பைமேனி 2 கைப்பிடி, பெருமருந்து தழை 10 தழை, யானை நெருஞ்சி 10 தழை, சீரகம் 50 கிராம், சிறு வெங்காயம் 1/4 கிலோ, உப்பு ஒரு கைப்பிடி அளவு இடித்து பிறகு கசக்கி சாறு பிழிந்து மூக்கில் விட வேண்டும். மாடுகளுக்கு நடுக்கம் ஏற்படும் அப்போது சாம்பிராணி கட்டி, மஞ்சள்தூள் கலந்து புகை போட்டு காட்ட வேண்டும்.

**மடி வீக்கத்திற்கு**

குத்துப்பாலை 10 தழை, உப்பு 1 கைப்பிடி அரைத்து மடியில் தடவி வர வேண்டும். காலை மற்றும் மாலையில் தடவி வர வேண்டும்.

**மாட்டுக்கு பொறை தட்டுதலுக்கு**

1/4 லிட்டர் அளவுள்ள படியை வாயில் உள்ளே வைத்து சாக்கை வைத்து தட்ட வேண்டும்.

**மாடு தொடை வீக்கத்திற்கு**

கரும்பாலை 10 தழை, உப்பு ஒரு கைப்பிடி அரைத்து வீக்கம் உள்ள இடத்தில் தடவி வர வேண்டும்.

**ஈன்ற பின் கழிவுகளை வெளியேற்றுவதற்கு**

ஆடு, மாடு ஈன்ற பின்பு கழிவுகளை வெளியேற்றுவதற்கு பழம்பாசி தழை 2 கைப்பிடி அரைத்து உள்ளே கொடுத்தால் கழிவு வெளிவரும்.

**நாய் செருமல், அஜீரணம், குரைக்கமாலிருந்தால்**

கற்பூரம், தீபாரனை காட்டி பெயர் தெரியாத தழையை 10 இலை எடுத்து பால் 1/4 லிட்டரில் அரைத்து உடல் முழுவதும் தடவி விட வேண்டும்.

**அசை போடாமல் இருந்தால், காய்ச்சலுக்கு**

இதற்கு களிக்கம் போட வேண்டும்.

செய்முறை: சுக்கு 50 கிராம், மிளகு 100 கிராம், இண்டு தழை 10 எண்ணம், பொரசமர உள் பட்டை 1/4 கிலோ இவைகளை அரைத்து சாறு எடுத்து நாசி, காது, கண்ணுக்கு சொட்டு விட வேண்டும் .

**சளிக்கு** (மனிதர்களுக்கு)

திருநுற்றிறுபச்சை இலை 10, மிளகு 7 எண்ணம் (குழந்தைகளுக்கு 5 எண்ணம்) அரைத்து தண்ணீரில் சேர்த்து கொடுக்க வேண்டும்.

சண்முகம் செட்டியார்
த/பெ. துரைசாமி செட்டியார்
பண்ணையத்து தோட்டம், மங்களபுரம் வழி
தாண்டா கவுண்டன் பாளையம் அஞ்சல்
ராசிபுரம் தாலுகா, நாமக்கல் மாவட்டம்
செல் : 9442002282

## சரசம்மா கடைபிடிக்கும் பாரம்பரியம்



நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை, பகுதி எரங்காட்டு தோட்டத்தில் வசிக்கும். சரசு அம்மாவிற்கு வயது 73 ஆகிறது. இவர் 5 வயதியிலிருந்தே வேங்கைப்பொட்டு தயாரித்து வந்ததை கூறுகிறார்.

**வேங்கைப் பொட்டு தயாரித்தல்**

நாட்டுக்கருவேல மரத்திலிருந்து 5 கிலோ அளவு நெற்று (மிகுந்த பிஞ்சாகவும் இருக்கக்கூடாது, முற்றிய நெற்றாகவும் இருக்கக்கூடாது. நடுத்தரமாக இருக்கலாம்). எடுத்து உலக்கை கொண்டு உரலில் துவைய வேண்டும். பின்னர் இதில் நீர் கலக்காமல் சாறு பிழிய வேண்டும். இந்தச் சாற்றை ஒரு தேங்காய் சிரட்டையில் (மேல் பகுதி) ஊற்ற வேண்டும். இதில் ஒரு சிறு இரும்பு துண்டை (சுமார் 1 அங்குலம் நீளமும் 1 செ.மீ தடிமனும்) இதிலே போட்டு விட வேண்டும். 2 நாட்களில் இந்த திரவம் கெட்டிப்படும். கருஞ்சிவப்பாக இருக்கும். இதனை நீர் விட்டு குழைத்து குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் பொட்டு இடலாம். இதனால் குழந்தைகளுக்கு கண்படுதல், கெட்ட தோஷங்கள் விலகும் என்று நம்புவர்.

**ஏகாதசி உணவு**

மார்கழி மாதம் வரும் வைகுண்ட ஏகாதசி நாளில் உணவு எடுத்துக் கொள்ளக் கூடாது. சாயங்கால வேளையில் பச்சரிசி மாவு இடித்து இளநீர், வெல்லம் கலந்து உருண்டை பிடித்து சாப்பிடலாம். இது பசியைத் கட்டுப்படுத்தும் . தூக்கத்தையும் வெல்லலாம். இரவில் பஜனைபாடல் பாடுவார்கள் அல்லது சினிமா பார்ப்பார்கள். இரவு தூங்காமலிருந்து மறு நாள் காலையில் துவாதசியில் 22 வகையான காய்கறி கூட்டு வைத்து சாப்பிடுவது வழக்கம். அகத்தி காய், பூ, தழை (3), சேமந்தண்டு (1), வாழைப்பூ, காய், தண்டு (3), மின்ன, மிஷ்டத்தழை (2), பூசணி, புடலை, பீர்க்கு, அவரை, பாகல், கொத்தவரங்காய், கீரை (7) எல்லாம் சேர்த்து கீரையாக கடைந்து இதில் வெல்லம் சேர்க்க வேண்டும். இதனை சாதத்துடன் பிசைந்து சாப்பிடலாம். அல்லது காய்கறிக்கூட்டாக வைத்து சாப்பிட வேண்டும். இதனால் உடம்பில் உண்ணாநோன்பில் உண்டாகும் நச்சுத்தன்மையைப் போக்கி ஊட்டச்சத்தினை அளிக்கும் என்று கூறுவர்.

**மாட்டுப்பொங்கல் சாதம்**

மாட்டுப்பொங்கல் அன்று சாயங்கலாம் பச்சரிசியும் பூசணிக்காய் சேர்த்து வேக வைத்து பொங்கல் சாதமாக மாட்டிற்குக் கொடுத்து விட்டு வீட்டிலுள்ளோர்களும் சாப்பிடுவார்கள்.

சரசு
எரங்காடு, அரியாகுழந்தை புதூர்
அரியா கவுண்டன்பட்டி அஞ்சல்
நாமகிரிபேட்டை வழி , இராசிபுரம் தாலுகா
நாமக்கல் மாவட்டம்

## லதாவின் மூலிகை வைத்தியம்

கடலூர் மாவட்டம் காட்டு மன்னார் கோயில் தாலுகா கீழகடம்பூர் காமராஜர் தெருவில் வசிப்பவர் லதா (வயது 38) . இவர் 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது மூலிகை வைத்தியம் பின்வருமாறு:




(படம்: சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் டிசம்பர் மாதம் 28, 29 2016 தேதிகளில் நடைபெற்ற அடித்தள கண்டுபிடிப்புகள் கண்காட்சியில் கலந்து கொண்ட காட்டுமன்னார் கோவில் லதா, விஜயமங்கலம் செந்தில், அமிர்தா மூலிகை மருந்து உற்பத்தி குழு உறுப்பினர்கள் கலைச்செல்வி, ஜெகதீஸ்வரி, வண்டிப்பாளையம்)

### நாய் கடிக்கு

கீழாநெல்லி செடியை வேருடன் தண்ணீரில் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். 100 மி.லி நல்ல எண்ணெயை காய்ச்ச வேண்டும். நல்ல எண்ணெயை காய்ச்சி கொண்டிருக்கும் சமயம் கீழாநெல்லி செடியை முறித்து எண்ணெயில் போட வேண்டும். அப்போது புகை வரும். பின்பு கொதித்த எண்ணெயை சிறு கரண்டியினால் எடுத்து நாய் கடித்த இடத்தில் ஊற்ற வேண்டும். உடனே கருவாடு சுட்டு சாப்பிட கொடுக்க வேண்டும். உடனே நாய் கடி விஷம் முறிந்து விடும். நாய் கடி புண் அதிகமாக இருந்தால் புண்ணை சுற்றி மாட்டு சாணத்தை கொண்டு தொட்டி செய்து எண்ணெயை அதில் ஊற்ற வேண்டும்.

### ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய்க்கு

நல்ல எண்ணெயில் மஞ்சள்தூள் சேர்த்து காய்ச்ச வேண்டும். காய்ச்சிய எண்ணெயை ஆட்டு கொம்புகளுக்கு இடையில் தலை சுழியில் ஒரு கரண்டியால் எண்ணெயை இட வேண்டும். அவ்வாறு செய்தால் துள்ளுமாரி நோய் குணமாகும்.

### ஜோதியின் வைத்தியம்

மாடுகளுக்கான குந்து நோய்க்கு:

வேப்பம்பட்டை – 1 கைப்பிடி, பழைய பாய் தூள் – 1 கைப்பிடி, வேப்பங்கொட்டை தூள் – 1 கைப்பிடி. இவை மூன்றையும் சேர்த்து புகை மூட்டம் போட்டு உடல் முழுவதும் காட்ட வேண்டும். மாட்டுக்கு உடனே சளி வெளியேறும். பின்பு பச்சரிசியில் சீரகம் போட்டு கஞ்சி காய்ச்சி மாட்டுக்கு குடிக்க கொடுக்க வேண்டும்.

சி. ஜோதி
நடுத்தெரு , கண்டமங்கலம் அஞ்சல்
காட்டுமன்னார் கோவில் தாலுகா
கடலூர் மாவட்டம்
செல் : 7094585961

## மாடு பராமரிப்பும் இலட்சணமும்

மாடு ஈன்ற உடன் இளங்கொடி சீக்கிரம் போட கேப்பை மாவு இளம் வெண்ணீரில் கலந்து 1/2 கிலோ வெல்லம் கலந்து கொடுக்கவும். சோற்றுகற்றாழையுடன் மஞ்சள், சுண்ணாம்பு சேர்த்து அரைத்து மடி வீக்கத்திற்கு தடவ வேண்டும். கன்றுகுட்டிக்கு சீம்பால் நன்றாக நிறைய கொடுக்க வேண்டும். மாடு ஈன்ற உடன் சீம்பால் கொடுக்கவும். கன்றுக்கு 4 லிட்டர் பால் நித்தமும் கொடுக்க வேண்டும். மாடு வாங்குவதற்கு அதனுடை பையில் நான்கு காம்புகள் சமமாக இருக்க வேண்டும். மாடு 1 ஈத்து, 2 ஈத்து ஈண்ட மாடாக இருக்க வேண்டும். மாடு வேகமாக நடக்க வேண்டும். மாட்டுக்கு பால் கறவையை பார்த்து விலைக்கு வாங்க வேண்டும். காம்பில் புண் இருக்கக் கூடாது. அதன் தோல் மென்மையாக இருக்க வேண்டும். அதன் பால் 2 லிட்டர் (நாட்டு மாடு), 5–10 லிட்டர் வரையும் ( கலப்பின மாடு) 10 லிருந்து 20 லிட்டர் வரையும் (ஹச்சப் மாடு) கறக்க வேண்டும்.

கே. ராஜாத்தி
5/86, சுரைக்காய்பட்டி
இலந்தைக்குளம் அஞ்சல், ஸ்ரீ வில்லிப்புத்தூர் தாலுகா
விருதுநகர் மாவட்டம்

ஆடதொடா இலையை தீவனத்தில் கலந்து கொடுக்கலாம். கால் அடிபட்டால் உடனே பாட்ட பூண்டு இலை பிழிந்து விடலாம்.

ஆர். மஞ்சுளா
கருப்பேரி கிராமம்
வாலிப்பட்டி அஞ்சல், போச்சம்பள்ளி தாலுகா
கிருஷ்ணகிரி மாவட்டம்

## சந்திரகாசனின் கால்நடை வைத்தியம்

கடலூர் மாவட்டம், காட்டு மன்னார்குடி தாலுகா, குருங்குடியை சேர்ந்தவர் திரு. சந்திரகாசன் (வயது 79). இவர் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 4 மகள், 1 மகன் உள்ளனர். இவருக்கு 2 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இவர் கடந்த 38 வருடங்களாக கால்நடை மூலிகை வைத்தியம் செய்து வருகிறார்.

இவர் இவ்வைத்திய முறைகளை சேத்தியாதோப்பு அருகிலுள்ள மதகாளிமாணிக்கம் கால்நடை மூலிகை வைத்தியர் சத்திவிளாகம் என்பவரிடமிருந்து கற்று கொண்டார். இவருடைய கால்நடை வைத்திய முறைகள் பின்வருமாறு:

**கால்நடை கால்முறிவுக்கு**

கால் முறிவு ஏற்பட்ட இடத்தில் தோலை இரு விரலை கொண்டு தூக்கி பிடித்து (சதை இல்லாமல்) கொண்டு அதில் ஒரு கோணி ஊசி கொண்டு ஓட்டை போட வேண்டும். பின்பு இந்த ஓட்டை வழியாக இங்கு ஸ்பில்லர் உதவியால் மூன்று முதல் ஐந்து சொட்டு பசு நெய்யை ஒரு சின்ன ஸ்ட்ரா உதவி கொண்டு உள்ளே ஊதி செலுத்த வேண்டும். அப்போது தோல் நன்றாக புடைக்குமளவுக்கு ஊத வேண்டும். இது போன்று ஒரு முறை செய்து விட்டால் எலும்பு முறிவு கூடி விடும் என்று சொல்கிறார். இவர் இப்பகுதியில் இந்த வைத்தியத்தில் சிறந்து விளங்குகிறார். இம்முறை கால்நடைகளின் முன்னங்கால் முறிவுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

**மூட்டு நழுவுதல், கால் முறிவுக்கு**

10 முருங்கை இலையை ஒரு ஸ்பூன் பசு நெய்யில் வதக்கி பொறியல் போல செய்து மாட்டுக்கு உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

கட்டுக்கொடி இலை ஒரு கைப்பிடி, மைதாமாவு 1 கைப்பிடி போட்டு கோழி முட்டை வெள்ளை கரு எடுத்து கொள்ள வேண்டும். கட்டுக்கொடி இலையை நன்கு அரைத்து கொண்டு மைதா மற்றும் முட்டை வெள்ளை கரு இவற்றை சேர்த்து குழைத்து முறிவு ஏற்பட்ட பகுதி சுற்றிலும் தடவ வேண்டும். பின்பு பச்சரிசி கஞ்சி நன்றாக குழைய கரைத்து அதை ஒரு காட்டன் துணியில் தடவி முறிவு ஏற்பட்ட பகுதியை சுற்றி கட்ட வேண்டும். பின்பு மூங்கில் பட்டை வைத்து காட்டன் துணி கொண்டு கட்ட வேண்டும். ஒரு வாரம் வரை கட்டு அவிழ்க்காமல் இருந்தால் எலும்பு கூடிவிடும்.

**பின்சப்பை நழுவுதல்**

நாட்டு கோழி முட்டை வெள்ளை கரு 3, சுண்ணாம்பு–2 பாக்கெட், காட்டன் துணி – 7 வட்ட அளவுகள் ஒரு ரூபாய் நாணயம் அளவு முதல் வட்ட துணியும் அதற்கு அடுத்து சற்று பெரிய வட்ட அளவு துணியும் அதன்பின் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது ஏழாவது துணியால் சற்று சந்து அளவு கூடி கொண்டே போக வேண்டும். முதலில் நாட்டு கோழி முட்டை வெள்ளை கருவையும் சுண்ணாம்பையும் நன்றாக கலக்கி வைத்து கொள்ள வேண்டும். பின்பு முதலில் கொஞ்சம் கலவை பாதிக்கப்பட்ட பகுதிக்கு மேல் வைக்க வேண்டும். அதன் மேல் முதல் சின்ன 1 ரூபாய் நாணய அளவு துணியை வைத்து ஒட்ட வேண்டும். அதன் மேல் மறுபடியும் பசையை தடவி இரண்டாவது துணியை வைத்து ஒட்ட வேண்டும். இதே போன்று அடுத்தடுத்த துணியை வைத்து 7 துணி வரை ஒட்ட வேண்டும். இது ஒரு வாரம் வரை எடுக்காமல் வைத்து கொள்ள வேண்டும். இம்முறையில் சப்பை நழுவுதல் குணமாகிவிடும்.

**கழிச்சலுக்கு**

நாட்டு நார்த்தங்காய் நான்காக நறுக்கி 1 லிட்டர் மோரில் போட்டு ஊறல் போட்டு மோரை உள்ளுக்கு கொடுக்க கழிச்சல் குணமாகும்.

**வயிறு உப்பிசத்திற்கு**

வாழை கிழங்கு 1/4 கிலோ எடுத்து இடித்து கொள்ள வேண்டும். இடித்த வாழை கிழங்கை 1 லிட்டர் நீராகாரத்தில் போட்டு பிழிந்து விட வேண்டும். பின்பு அந்நீராகாரத்தை காலை மற்றும் மறு நாள் காலை இரண்டு வேளை மாட்டுக்கு உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

**சினை பிடிக்க**

ஆனை நெருஞ்சி இலையை 1 லிட்டர் நீராகாரத்தில் கசக்கி வடிகட்டி மாட்டுக்கு உள்ளுக்கு பௌர்ணமிக்கு 3 நாள் முன்பும் அமாவாசை 3 நாள் பின்பும் முதல் நாள் ஒரு வேளையும் மறுநாள் ஒரு வேளையும் குடிக்க விட வேண்டும். பின்பு பருவத்திற்கு வந்த அறிகுறி தென்பட்டால் காளைக்கு போட சினை பிடித்து விடும்.

**கர்ப்பப்பை புண் குணமாக**

மருதங் கொட்டை அரைத்து 100 கிராம் சாந்தை பசும்பாலில் கலந்து கொடுக்க வேண்டும். இரண்டு வேளை கொடுக்க குணமாகும்.

**தீனி திண்ணாமை, தெளியாமைக்கு**

1/4 கிலோ சின்ன வெங்காயத்தை உரித்து வெட்டி எருமை தயிரில் போட்டு வெயிலில் காலை 8 மணியாளவில் வைத்து விட வேண்டும். பின்பு 1 மணியளவில் அந்த தயிரை கசக்கி இஞ்சி கலந்து குடிக்க கொடுக்க வேண்டும்.

**கோமாரி நோய்க்கு**

வேப்ப எண்ணெய், சூடம், மஞ்சள் கலந்து கோமாரி உள்ள மாட்டுக்கு கால் பகுதியில் தடவி விட கோமாரி குணமாகும்.

**மடி நோய்க்கு**

சின்னி தழை 50 கிராம் அளவுக்கு அரைத்து உள்ளுக்கு கவளமாகக் கொடுக்க வேண்டும். மேலும் அரைத்து மடியில் தடவ வேண்டும். அல்லது எலுமிச்சை பழம் சாறும் சாக்பீஸ்கட்டியும் கலந்து பிசைந்து மடியில் தட வேண்டும்.

**குந்து நோய்க்கு**

துளசி– 1 கைப்பிடி,எருக்கம்பழுப்பு – 5 இலை, புகையிலை (5ரூ) 1 பாக்கெட், மிளகாய் வத்தல் – 9 அல்லது 11.

மேற்கூறியவற்றை அரைத்து கவளமாக வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். மூன்று வேளை கொடுக்கலாம். மேலும் சாம்பிராணி புகை போட வேண்டும்.

**கண் நோய்க்கு**

நீர் முள்ளி தழை 1/2 கைப்பிடி, கல் உப்பு 10 கல் சேர்த்து கசக்கி சாறு எடுத்து 5 சொட்டு கண்ணில் விட கண் நோய் குணமாகும்.

சந்திரகாசன்
த/பெ. துரைக்கண்ணு
பிள்ளையார் கோயில் அருகில்
குருங்குடி கிழக்கு தெரு, கண்டமங்கலம் அஞ்சல்
காட்டு மன்னார் கோயில் மாவட்டம்

## முரளிதர் ரெட்டியின் "ஓங்கோல்" மாட்டு பண்ணை



ஆந்திராவில் கர்னூல் மாவட்டத்தில் முச்சுமரி கிராமத்தில் முரளிதர்ரெட்டி கடந்த 45 ஆண்டுகளாக "ஓங்கோல்" நாட்டு மாடு பராமரிப்பு செய்து வருகிறார். இவருக்கு 100 ஏக்கர் மானாவரி நிலம் உண்டு. இவர் 4 காளைகள் உட்பட 23 ஒங்கோல் ஜாதி மாடுகள் பராமரித்து வருகிறார். காளைகளை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றி விடுவார். ஆந்திராவில் கலப்பின மாடுகள் உருவாகிவரும் சூழலில் இவர் தனது பண்ணையில் ஓங்கோல் ஜாதி மாடு மட்டும் வைத்து பிற வெளிநாட்டு இன கலப்பை செய்யாமல் பாதுகாத்து வருகிறார். இவர் இது வரை கடந்த 30 ஆண்டுகளில் 64 காளைகளை பிற விவசாயிகளுக்கு கொடுத்துள்ளார். இவர் கடைபிடித்து வரும் பராமரிப்பு முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**மாடுகளுக்கு வயிற்று வலி போக்க**

வயிற்று வலி உள்ள மாடுகள் சுறுசுறுப்பில்லாமல் அசமாந்தமாகக் காணப்படும். அரிசியுடன் பூசணி, மிளகாய் மற்றும் கிராம்பு ஆகியவற்றை சேர்த்து சமைத்து சாதமாக உள்ளே தர வேண்டும். இத்துடன் ஆமணக்கு எண்ணெய் மூலம் மாட்டின் பின் பகுதியில் தடவி மசாஜ் செய்து விட வேண்டும். பிறகு செப்பு பாத்திரத்தில் சுடு நீர் எடுத்து இதன் மூலம் மாட்டிற்கு ஒத்தடம் தர வேண்டும்.

**மாடு பருவத்திற்கு வர**

சீந்தில் கொடி, கொன்னை மரப்பட்டை, பலாமர கொழுந்து இலை, தழுதாழை இலை, கொடி வேலி இலை இவை அனைத்தையும் தேவையான அளவு எடுத்து காய வைத்து தூளாக்க வேண்டும். இதனை பசு மாட்டு பாலுடன் வெல்லம் சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**கன்றுகளின் அஜீரண கோளாறுக்கு**

கல் உப்பு, சுக்கு , நிலவேம்பு இவைகளை உலர வைத்து தூளாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இதனை 100 கிராம் அளவுக்கு எடுத்து நீரில் கலந்து கொடுக்கலாம். 250 மி.லி விளக்கெண்ணை உள்ளே கொடுக்க வேண்டும். இதனால் வயிறு சுத்தமாகிவிடும்.

**மாடு கழுத்து சுழுக்கிற்கு**

இது உழவு மாடுகளுக்கு கழுத்து பகுதிகளில் காணப்படும். இதற்கு குளிக்க உபயோகப்படுத்தப்படும் சோப்பை சிறு துண்டுகளாக நறுக்கி முட்டை வெள்ளை கருவுடன் பிசைந்து கழுத்துப் பகுதியில் தடவ வேண்டும். இந்த பசை காய்ந்தவுடன் கழுத்துப் பகுதியை இழுத்து பிடிக்கும். மாடு இதனை பொறுக்காமல் கால்களை

உதைக்க ஆரம்பிக்கும். இவ்வாறு கால்களுடைய வேகமான அசைவினால் சுழுக்கு விட்டு விடும். இந்த சோப்பு முட்டை கலவையை இரண்டு அல்லது மூன்று முறை உபயோகப்படுத்த வேண்டும்.

**மாடுகளின் குடற்புழுவிற்கு** (Tapeworm)

மாடுகள் குடற்புழுவினால் பாதிக்கப்பட்டால் சரியாக தீனி எடுக்காது; சோர்வுடன் காணப்படும். இதற்கு வெள்ளை பூண்டு உரித்து 20 பல் எடுத்து உப்பு சேர்த்து அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**மாடுகளின் தோல் நோய்க்கு**

பாதிக்கப்பட்ட மாடுகள் அரிப்பினால் உடம்பை மதில் மேல் உரசும். பத்துக்கள் காணப்படும். வெள்ளை பவுடர் போன்று தடிப்புகள் காணப்படும். இதற்கு ஊமத்தை இலை, பேய் குமட்டி இலை, உப்பு இதனை மோர் சேர்த்து அரைத்து பசையாக்கி பாதிக்கப்பட்ட பகுதியில் தடவ வேண்டும்.

**மாடுகளின் முன்று நாள் காய்ச்சலுக்கு**

காய்ச்சல் வந்த மாடுகள் நடக்காது கஷ்டப்படும். சரிவர தீனி எடுக்காது. இந்த நோய் பருவ மழை ஆரம்பித்த சில நாட்களில் தோன்றும். மூன்று நாட்கள் வரை காணப்படும். இதற்கு பாகற்காய் 1 கிலோ எடுத்து நறுக்கி நீர் விட்டு அரைத்து 1 லிட்டர் நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். இதனை காலை, மாலை இரு வேளை மூன்று நாட்கள் தொடர்ந்து கொடுக்க வேண்டும்

**மாடுகள் வலுப் பெற**

மெலிந்த மாடுகள் உடல் எடை கூட தேங்காய் சில்லு 100 கிராம், உப்பு 25 கிராம், கொழிஞ்சி இலை – 50 கிராம். சேர்த்து அரைத்து 1 லிட்டர் நீராகார தண்ணீர் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். இதனை ஒரு வாரம் கலந்து கொடுக்க வேண்டும்.

**அடிபட்ட மாடுகளுக்கு**

மாட்டிற்கு கால் பகுதியில் அடிபட்டாலும் புண் இருந்தாலும் செம்மறியாட்டுச் சாணம் ஊற வைத்த புளிய விதை, கரையான் புற்று மண் ஆகியவற்றை ஒன்று சேர்த்து நீர் விட்டு கொதிக்க விட வேண்டும். இதில் ஆர வைத்து கிடைக்கும் பசையை பாதிக்கப்பட்ட இடத்தில் தடவ வேண்டும்.

**மாடுகளின் மூட்டு வலிக்கு**

நல்ல பாரம் இழுக்கும் மாடுகளுக்கு இந்த பிரச்சனை ஏற்படுவதுண்டு. இதற்கு முருங்கைப்பட்டை, தைலமரஇலை 1 கிலோ எடுத்து கசாயம் தயார் செய்து கால்களில் ஊற்ற வேண்டும். இதனை 2–3 தடவை செய்து தர வேண்டும்.

**பசு மாடுகளில் பாலின் அளவைக் கூட்ட**

சேரன்கொட்டை விதைகள் 4 எடுத்து ஒரு மண்பானையில் நீர் ஊற்றி 2 நாட்கள் ஊற வைக்க வேண்டும். இதனை அரைத்து அரிசித்தவுட்டுடன் கலந்து உள்ளே தர வேண்டும்.

**சினைபிடிக்காத மாடுகளுக்கு**

உன்னிச்செடி என்ற லண்டான செடியின் இலை கைப்பிடி, கோரைக்கிழங்கு 3, உப்பு 10 கிராம் சேர்த்து அரைத்து உள்ளே தர வேண்டும். இந்த மருந்து கொடுத்த பின் மாட்டிற்கு குடிநீர் தர மாட்டார்கள். இவ்வாறு வைத்தியம் செய்தால் 1 வாரத்தில் மாடு பருவத்திற்கு வந்த அடையாளத்தைக்காட்டும்.

**பாம்பு கடிக்கு**

ஆடு திண்ணாப்பாலை இலையை அரைத்து வெண்ணெய் சேர்த்து உள்ள தர வேண்டும். இது விஷத்தின் தன்மையைக் குறைக்கும்.

முரளிதர் ரெட்டி
முச்சுமரி கிராமம், பகிடயாள மண்டலம்
கர்னூல் மாவட்டம், ஆந்திரா
செல்: 9440291877

## காரமடை இராஜுவின் கால்நடை வைத்தியம்

இராஜு (வயது 64) காரமடை, விஜயநகரத்தில் வசித்து வருகிறார். இவர் டிப்ளமோ அக்ரி மற்றும் முதுநிலை சமூகவியல் படித்து விட்டு காரமடை வேளாண் அறிவியல் மையத்தில் (கே.வி.கே) 27 வருடங்கள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பிறகு மாடு மற்றும் ஆட்டுப் பண்ணை வைத்து பராமரித்து வருகிறார். இவரது இளைய மகன் இவருக்கு உதவியாக பண்ணையைப் பராமரித்து வருகிறார். இவரது மூத்த மகன் இன்ஜினியராக பணியாற்றி வருகிறார். இவர் மேலும் தீவனம், ரைஸ் மில்–மாவு அரைக்கும் மில் வைத்துள்ளார். அம்மன் கோவிலுக்கு மாவிளக்கு மாவு அரைத்து கொடுக்கிறார். (சாதரணமாக மாவிளக்கு மாவு உரலில் குத்தி தான் தயாரிப்பார்கள். மிக்ஸியில் தயார் செய்தால் மிக்ஸி பழுதாகி விடும்).

மாடு பராமரிப்பு :

இவரிடம் 4 ஜெர்சி இன மாடுகளும் 1 கன்றும் உள்ளன. இவர் மாடுகளை சிறந்த முறையில் சுத்தமாக பராமரித்து வருகிறார். பகலில் ஒரு கொட்டகையிலும் இரவில் ஒரு கொட்டகையிலும் மாடுகளை கட்டி பராமரித்து வருகிறார். இவர் இரவில் கட்டும் கொட்டகையில்

தரையில் இரப்பர் சீட் போட்டு மாடுகள் வழுக்கி விழாத படி பராமரித்து வருகிறார். மேலும் சினை மாடுகள் சந்து போடும் போது சினைப்பை வெளியே தள்ளிவிடா அளவுக்கு மாடு நிற்கும் பின் பக்கத்தை சற்று உயர்த்தி கட்டியுள்ளார். இவர் தனது மாட்டுக்கு கோ–4, கோ.எப்.எஸ் – 27 (Co- 4, CoFS-27), வேலிமசால் போன்ற தீவனப்பயிரை கொடுத்து வருகிறார். அடர் தீவனமான சந்தோஷ் தீவனம் – 11/2 கிலோ, கோதுமை தவிடு 1 பங்கு + அரிசி தவிடு 2 பங்கு கலவை – 1/2 கிலோ, பருத்தி கொட்டை (அரைத்தது) 1/2 கிலோ, உப்பு சிறிது. இந்த கலவையை தினமும் 2 வேளை கொடுத்து வருகிறார். இவர் தினமும் 20 லிட்டர் பால் விற்பனை செய்து வருகிறார். பால் ரூ. 27–30/ லிட்டர் என்ற அளவில் ஆரோக்யா பால் சொசைட்டிக்கு விற்பனை செய்து வருகிறார்.

**ஆடு வளர்ப்பு**

இவர் தலைச்சேரி, போயர், ஜமனாபாரி ஆகிய 3 இன ஆடுகளை மொத்தம் 40 ஆடுகளை தனியாக பரண்மேல் ஆடு வளர்ப்பு முறையில் வளர்த்து வந்தார். 2008 ம் ஆண்டு வறட்சியின் காரணமாக ஆடுகளின் எண்ணிக்கையை குறைத்து விட்டார். தற்போது இவரிடம் தலைச்சேரி இன ஆடுகள் 25 மட்டும் உள்ளன. ஆடுகளுக்கு தீவனப்புல் கொடுக்கப்படுகிறது.

**தீவனப்புல் வளர்ப்பு**

இவர் 4 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு வருடத்துக்கு ரூ. 75,000/– என்ற முறையில் நிலத்தை ஒப்புக் கொண்டுள்ளார். இவர் 4 ஏக்கர் நிலத்தில் 21/2 ஏக்கர் தென்னையும் ஒரு ஏக்கர் தீவனப்புல்லும் 1/2 ஏக்கரில் சோளமும் பயிர் செய்து வருகிறார். தென்னை தோட்டத்தில் ஊடு பயிராக தீவனப்புல் வளர்த்து வருகிறார். தீவனப்புல் (Co-4, CoFS) வேலிமசால், சோளப்பயிர் போன்ற தீவனப்புற்களை பயிர் செய்து வருகிறார். இவர் தோட்டத்தில் விளைகின்ற தீவனப்புற்களை தனது ஆடு மாடுகளுக்கு கொடுத்து வருகிறார். தென்னை வளர்ப்பின் மூலம் வருடத்திற்கு ரூ. 80,000 கிடைப்பதாகக் கூறுகிறார்.

**அஜீரண கோளாறுக்கு**

மாடுகளுக்கு அதிகமாக புண்ணாக்கு போட்டால் அஜீரண கோளாறு வரும். தீவனத்தை அளவோடு கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு சுத்தமான குடிநீர் கொடுக்க வேண்டும். மாட்டுக்கு 100 மி.லி இ.எம். (Effective Microorganisms) கரைசல் கொடுத்தால் குணமாகிவிடும். இவர் இ.எம். 1 லிட்டர் ரூ.290க்கு வாங்குகிறார். இதனை பெருக்க 15 லிட்டர் நீர், 2 கிலோ வெல்லம் சேர்த்து கொதிக்க வைத்து ஆற வைக்க வேண்டும். இதில் 1 லிட்டர் இ.எம். கரைசல் சேர்க்க வேண்டும். இதனை 15 நாட்கள் புளிக்க விட்டு பின்னர் பயன்படுத்தலாம்.

**புண்ணுக்கு**

வேப்ப எண்ணெயை கொதிக்க வைத்து அதில் மஞ்சள் தூள் சிறிதும், கட்டி கற்பூரம் 1 ம் போட்டு கலந்து தடவினால் புண் குணமாகும். அல்லது தேங்காய் ஓட்டை சுட்டு அதன் சாம்பலை தேங்காய் எண்ணெயில் குழைத்து புண்ணில் தடவி வர புண் குணமாகும் அல்லது இ.எம் கரைசலை தடவ குணமாகும். புண்ணை காக்காய் கொத்தாமல் இருக்க சாணத்தை சுண்ணாம்புடன் சம அளவு கலந்து தடவ வேண்டும்.

**வாய்காணை, கால்காணை நோய்க்கு (FMD)**

வாய்காணை கால்காணை நோய்க்கு 50 மி.லி இ.எம் கரைசல் மாட்டுக்கு குடி தண்ணீரில் கலந்து கொடுத்தால் குணமாகும்.

**மடி நோய்க்கு**

வேப்ப எண்ணெயை கொதிக்க வைத்து அதில் மஞ்சள் தூள், கட்டி கற்பூரம் கலந்து மடியில் பூசி வர குணமாகும். அல்லது முகத்திற்கு தடவும் கிரீம் (Fair & Lovely) தடவினால் குணமாகும். ஆடு, மாடுகளை சுத்தமாக வைத்து இருந்தால் பேன், உன்னிகள் வராது. மழை பனிக்காலத்தில் வெளி நபர்கள் மாடுகளை பார்க்க அனுமதிப்பது இல்லை என கூறுகிறார். ஏனெனில் தொற்று நோய் வர வாய்ப்பு உள்ளது. ஆடு குட்டி போட்ட பிறகு ஒரு கைப்பிடி முருங்கை இலையைத் தின்னக் கொடுத்தால் வயிறு சுத்தமாகிவிடும்.

வி. இராஜு
ஸ்ரீ கலா ஆயில்பிளவர் மில்ஸ்
விஜயநகரம், குன்னூர் அஞ்சல்
சீலியூர் வழி, மேட்டுப்பாளையம் தாலுகா
கோவை மாவட்டம், செல்: 9976622454

## மயில்சாமியின் மூலிகை வைத்தியம்

கோவை மாவட்டம், அன்னூர் மேட்டுப்பாளையம், இடையர்பாளையத்தில் ஆர். மயில்சாமி (வயது 60) வைத்தியர் வசித்து வருகிறார் . இவர் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 12 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இவரது நிலத்தில் வாழை, மஞ்சள், போன்ற பயிர்களை பயிர் செய்கிறார். இவர் தனது 10 ம் வகுப்பு படிக்கும் நாளிலிருந்தே மனிதர்களுக்கும் மாடுகளுக்கும் மூலிகை வைத்தியம் செய்ய துவங்கினார். இவர் இவ்வைத்திய முறைகளை தனது தாத்தா சிறுமுகை

பழனி கவுண்டரிடமிருந்து கற்றுக் கொண்டார். இவர் 1967 ம் ஆண்டு முதல் தோல் வியாதிகள், அரிப்பு, விஷக்கடி போன்ற வியாதிக்களுக்கு வைத்தியம் செய்ய துவங்கினார். இவர் காணாகடி (சிறுபாம்பு) கடிக்கு சிறப்பான வைத்தியம் செய்து குணப்படுத்தியதன் மூலம் இவர் அப்பகுதியில் பெயர் பெற்ற வைத்தியர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மாடுகளுக்கும் மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவர் கால் நடைகளில் முடக்குவாதம் வந்த மாடுகளுக்கு சிறப்பாக வைத்தியம் செய்து அதாவது மருத்துவரால் அம்மாடு தேராது இறந்து விடும் என்று சொல்லி ஒதுக்கப்பட்ட மாடுகள் குணமடைய செய்து பெயர் பெற்று விளங்குகிறார். இவரது ஊரிலிருந்து சுமார் 7–8 கி.மீ சுற்றளவில் உள்ள அனைத்து கிராம வியாதிகளுக்கும் இலவசமாக வைத்தியம் செய்து வருகிறார். இவருக்கு ஒரு மகன், ஒரு மகள் இவரது மகன் பொறியாளராக பணியாற்றி வருகிறார். . இவர் வீட்டில் தனியாக இருந்து விவசாயத்தையும் கூட பிறருக்கு இலவசமாக மூலிகை வைத்தியமும் ஆடு மாடுகளுக்கு இலவசமாக மூலிகை வைத்தியம் செய்து தொண்டாற்றி வருகிறார்.

கால்நடை மூலிகை வைத்தியம்:

**மடிநோய்க்கு:** பெரியவரிகுமட்டி இலை – 1 கைப்பிடி, குப்பைமேனி இலை – 1 கைப்பிடி, சிறு பொதும்பி இலை – 1 கைப்பிடி, அப்ப கோவை இலை – 1 கைப்பிடி, மஞ்சள் – 1 துண்டு. மேற்கூறியவற்றை அனைத்தும் அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மாட்டின் பாலை கறந்துவிட்டு மடியையும் பால் கறந்த கையையும் நன்றாகக் கழுவி விட வேண்டும். பின்பு அரைத்து வைத்திருக்கின்ற கலவையை மடியில் நன்கு தடவி விட வேண்டும். இது போன்று தினமும் இரண்டு வேளை தொடர்ந்து 3 நாட்கள் செய்து வர மடி நோய் குணமாகும். மடிநோயால் பாதிக்கப்பட்ட 1000 த்திற்கும் மேற்பட்ட மாடுகளை குணப்படுத்தியுள்ளதாக கூறுகிறார்.

**மாடு சினைபிடிக்க**

சோற்றுக்கற்றாழை – 4 மடல், மஞ்சள் – 4 துண்டு இரண்டையும் அரைத்து முதல் 3 நாட்களுக்கு நீரில் கலந்து காலை வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும். பின்பு 1/2 படி நாட்டு தட்டைப் பயிரை அரைத்து தண்ணீரில் கலந்து 4 வது நாள் முதல் 10 நாட்கள் வரை தினமும் காலையில் கொடுத்து வர மாடு சினை பருவத்திற்கு வரும். பின்பு மாட்டிற்கு காளையோ அல்லது சினை ஊசியோ போட்டால் மாடு சினை பிடித்து விடும். இது போன்று சுமார் 300 மாடுகளுக்கு மேல் சினை பிடித்து விட்டன.

**இளங்கொடி விழ**

எள்– 1/4 கிலோ, கரும்பு சர்க்கரை – 1/4 கிலோ இரண்டையும் இடித்து தண்ணீரில் கலந்து ஒன்று விட்டு ஒரு நாள் கொடுக்க இளங்கொடி விழுந்து விடும்.

**கழிச்சலுக்கு**

இளநீர் – 5, கரும்பு சர்க்கரை – 1/2 கிலோ இரண்டையும் கலந்து தினமும் 3 வேளை 3 நாட்களுக்கு கொடுத்து வர குணமாகும். இவ்வைத்தியம் குணமாகாவிட்டால் கீழ் கண்ட வைத்தியத்தை கடைபிடிக்கலாம். பாலை இலை (பாலாமரம்)– 1/4 கிலோ, சிறுகீரை – 200 கிராம், பழம்பாசி இலை – 200 கிராம், சீரகம் – 100 கிராம், மிளகு – 30 கிராம், ஓமம் – 30 கிராம், பெருஞ்சீரகம் – 30 கிராம். மேற்கூறியவற்றை அரைத்து ஆறிய சுடு தண்ணீரில் கலந்து கொடுத்து வர 3 வேளையில் குணமாகும். அல்லது கம்பஞ்சோறு தெளிந்த நீரில் கலந்து கொடுக்கலாம். தொடர்ந்து கழிச்சல் நிற்கும் வரை கொடுக்கலாம். அல்லது சப்போட்டா செங்காய் 1/2 காயை மாட்டுக்கு உள்ளுக்கு கொடுத்தால் கழிச்சல் நிற்கும்.

**கோமாரி / கால் காணை, வாய்காணைக்கு**

வில்வ இலை – 1/2 கிலோ, வேம்பு இலை – 1/2 கிலோ இரண்டையும் இடித்து வைத்து கொள்ள வேண்டும். சீரகம் – 50 கிராம், ஓமம் – 50 கிராம், மஞ்சள் – 50 கிராம் சோம்பு – 50 கிராம் இவற்றை அரைத்துக் கொண்டு இடித்த இலையை கலந்து கொண்டு மண் பாத்திரத்தில் 4 லிட்டர் தண்ணீரில் வேக வைத்து இரவு முழுவதும் அனலில் இருக்க வேண்டும். மறு நாள் காலை ஆற வைத்து மாட்டுக்கு குடிக்கத் தர வேண்டும். இது போன்று தொடர்ந்து 3 நாள் செய்து வர குணமாகும்.

**குந்து நோய்க்கு**

குந்து நோய் வந்த மாடு தீனி திங்காது, சளி, இருமல் இருக்கும். மாடு நடக்காது. நொச்சி இலை – 1/2 கிலோ, பாலை இலை (துடுப்பாலை) – 400 கிராம், மிளகு – 50 கிராம், திப்பிலி – 25 கிராம், ஓமம் – 30கிராம், வெள்ளைப்பூண்டு – 50 கிராம், இஞ்சி, சுக்கு – 25 கிராம். மேற்கூறியவற்றை அரைத்து ஆற வைத்த வெந்நீரில் கலந்து தொடர்ந்து 3–4 நாட்கள் கொடுக்க மாடு குணமாகும்.

**முடக்கு வாதத்திற்கு** (Tetanus)

மாடு படுத்துக் கொண்டு எழும்பாது. தீனி திங்கும். தண்ணீர் குடிக்கும். சாணி, கோமியம் போகும். ஆனால் மாடு படுத்துக் கொண்டு எழுந்திருக்காது. கழுத்தை ஒரு பக்கம் இழுத்துக் கொண்டு இருக்கும். கண் ஒரு பக்கமாக பார்க்கும். தாலி இலை – 500 கிராம், கற்பூரவள்ளி இலை – 250 கிராம், மூங்கில் இலை – 500

கிராம், மாவிலங்கம் – 500 கிராம், மிளகு – 50 கிராம், ஓமம் – 50, திப்பிலி – 30 கிராம், கருஞ்சீரகம் – 50 கிராம், பூண்டு – 50 கிராம், சுக்கு – 30கிராம் . மேற்கூறியவற்றை அரைத்து ஆறிய சுடு நீரில் கலந்து கொடுக்க வேண்டும். தினமும் மாடு எழும்பும் வரை கொடுத்து வர வேண்டும். மேலும் நொச்சி– 1 கைப்பிடி, எருக்கம் பூ மொட்டு – 1 கைப்பிடி, வேப்பஎண்ணெய் –1/2 லிட்டர் . மேற்கூறிய இரண்டையும் கல்லில் இடித்து கொண்டு இரும்பு வானொலியில் கொதிக்க வைத்து இறக்கி விட வேண்டும். இடித்த இலைகளை ஒரு கம்பளிதுணியில் மூட்டையாக கட்டி கொதித்த எண்ணெய் வெதுவெதுப்பான சூட்டிற்கு வந்த பிறகு இலை மூட்டையை எண்ணெயை தொட்டு தொட்டு மாட்டுக்கு பாதித்த இடத்தில் ஒத்தடம் கொடுத்து விட வேண்டும். மேற்கண்ட வைத்தியத்தை தொடர்ந்து 2–3 நாட்களுக்கு செய்து வர வேண்டும். பின்பு மாட்டை கயறு கட்டி தூக்கி பிசியோ தெரபி செய்து மாட்டை நடக்க பயிற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் மாடு குணமாகிவிடும் இது போன்று டாக்டரால் குணப்படுத்த இயலாத மாட்டை விற்று விடுங்கள் என்று சொன்ன மாடுகளை எல்லாம் சுமார் 200 மாடுகளுக்கு மேல் குணப்படுத்தியுள்ளார்.

**கண்நோய்க்கு**

நீலசுள்ரி இலை – 5 கிராம், புகையிலை – 5 கிராம், சீரகம் – 1 டீஸ்பூன், மிளகு – 2–3 இவற்றை இடித்து சாறை கண்ணீல் பிழிந்து விட கண் நோய் குணமாகும். மேலும் மாடு காது, கண்ணீல் விட தொடர்ந்து 5 நாள் அல்லது குணமாகும் வரை கொடுக்கலாம்.

ஆர். மயில்சாமி
503, இடையர்பாளையம்
அன்னூர் மேட்டுபாளையம் அஞ்சல்
அன்னூர் வழி (தாலுகா)
கோவை மாவட்டம் – 614653
செல் : 9715109868, 9994509868

## மக்காசோள தீவன பயிர் சாகுபடி

ஈரோடு மாவட்டம், சத்யமங்கலம் அருகில் உள்ள பெரியூர் கிராமத்தில் வசிப்பவர் திரு.கே. கிருஷ்ணசாமி. இவர் முது நிலை பட்டதாரி. இவருக்கு வயது (52). இவருக்கு 3 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதில் 11/2 ஏக்கர் நெல் விவசாயமும் 1/2 ஏக்கர் காய், கறியும் 1 ஏக்கரில் மக்காசோளமும் பயிர் செய்வதை வழக்கமானதாக கொண்டுயுள்ளார். ஒரு ஏக்கர் மக்காச்சோள பயிரை 90 நாட்களில் மாட்டு தீவன பயிராக ரூ. 12,000 க்கு விற்று விடுகிறார். இவரது விவசாய முறையில் பெரும்பாலும் இயற்கை முறைகளை சார்ந்து இரசயான உரங்களை தவிர்த்து இரசயான உரங்களின் பயன்பட்டை மிகவும் குறைத்து விவசாயம் செய்து வருகிறார்.

**அடியுரமிடுதல்**

பொதுவாக கோடையில் சாண எருவை ஏக்கருக்கு 3 டிராக்டர் லோடு போடுகிறார். இத்துடன் ஒரு டிராக்டர் லோடுக்கு 100 கிலோ வீதம் ஏக்கருக்கு 300 கிலோ வேப்ப புண்ணாக்கு கலந்து அடி உரமிடுகிறார். வாய்ப்பு கிடைத்தால் அதாவது மழை நிலத்தில் ஈரமிருந்து சணப்பை வளர்த்து பூக்கும் தருவாயில் உழுது விடுவது வழக்கமாக செய்து வருகிறார். நடவு முடிந்த பிறகு ஏக்கருக்கு 200 லிட்டர் பஞ்சகவ்யா தெளிக்கிறார். மேலும் டிஏபி ஒரு மூட்டை போடுகிறார். அடுத்து 15 நாள் கழித்து ஏக்கருக்கு 1/2 மூட்டை யூரியா 1/2 மூட்டை பொட்டாஷ் போடுகிறார். மீண்டும் 15 நாள் கழித்து அதே போல் யூரியா பொட்டாஷ் போடுகிறார். நெல்லுக்கு உரம் அதிகமாக போட்டால் நெற்பயிர் கரும் பச்சையாக மாறும். இதனால் இலைச் சுருட்டு புழு தென்படும். பயிர் வெளிர் பச்சையாக இருந்தால் தான் பயிருக்கு நல்லது. பயிரை பூச்சி தாக்காது. பயிர்அந்த உரமிட்டு பச்சையாக இருந்தால் அதாவது கரும்பச்சையாக இருக்கும்.

என். கிருஷ்ணசாமி
30, கட்டபொம்மன் வீதி
பெரியூர் அஞ்சல்
சத்தியமங்கலம் வழி (தாலுகா)
ஈரோடு மாவட்டம் – 638402
செல் : 9443371397

## இரு சக்கர வாகனத்தில் புதுமையான கிக் ஸ்டார்ட்டர்



சிதம்பரத்தில் ஆட்டோ ஒர்க்ஷாப் நடத்தி வரும் தெச்சணா மூர்த்தி புதுமையான கிக் ஸ்டார்ட்டர் உருவாக்கியுள்ளார். இதனுடைய தனித்தன்மையானது கிக்கர் சிலிப் ஆகாது, கிக்கர் சிலிப் ஆவது காரணம், ஷாப்பட்டின் மில்லிங் தேய்ந்து போனால் மற்றும் போல்ட் லூசு ஆக இருந்தால் சிலிப் ஆகிவிடும், இந்த கிக்கர் ஆல்ட்ரேஷன் செய்யப்பட்டது. இந்த கிக்கர் ஷாப்ட் சிலிப் ஆகாது.

இதன் சிறப்பு அம்சம்:




கிக்கர் சிலிப் ஆகி விட்டால் வெல்டிங் பன்னத் தேவையில்லை, ஷாப்ட் மாற்ற வேண்டியது இல்லை, இஞ்சீனை பிரிக்க வேண்டியது இல்லை, செலவும் கம்மியாகவே முடியும்.

வி. தெஷ்சணாமூர்த்தி,
36, சபாநாயகர் தெரு, சிதம்பரம் – 608001
செல் – 9790551507

## கால்நடை மருத்துவத்தில் ஏலக்காய்

ஏலக்காய், எப்போதுமே மதிப்புமிக்க வாசனைப் பொருள், சமையலில் அதன் மனம் பெற்றுள்ள முக்கியத்துவத்தைப் போலவே கால்நடை மருத்துவத்திலும் இதன் குணம் பலவித மருந்துகளாகப் பயன் தருகிறது. அறிவியல் முறையில் உறுதி செய்யப்பட்ட சில மருத்துவக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**வயிற்றுக்போக்கிற்கு**

ஆரோக்கியமான பசுக்கள் இடும் சாணம் கெட்டியுடன் சற்றே நெகிழ்வுத்தன்மை கொண்டதாக இருக்கும். இதில் ஏதேனும் மாற்றம் தெரிந்தால் அதாவது அதிகத் தண்ணீராகவோ, இரத்தம், சீதம் கலந்து வந்தால் அது நோயின் அறிகுறியாகும். இதற்கு அஜீரணம் அல்லது நோய்த் தொற்று காரணமாக இருக்கும். இந்த அறிகுறிகள் உள்ள போது காய்ச்சலும் வரலாம். இதற்கு இரண்டு தேக்கரண்டி ஏலக்காய், வெள்ளைக் குன்டுமணி விதை இரண்டு, நான்கு தேக்கரண்டி சுக்குப் பொடி இவற்றை நன்கு அரைத்து அரை கிலோ வெல்லத்துடன் கலக்கிய கலவையை ஒரு நாளைக்கு ஒரு நேரம் வீதம் மூன்று நாட்களுக்குத் தர வேண்டும். அதிக வயிற்றுப் போக்கு காரணமாக உடல் மெலிவு ஏற்பட்டிருந்தால் இதே மருந்தை கால் கிலோ அளவில் மூன்று நாட்களுக்குத் தர வேண்டும். உடல் பொலிவு பெரும்.

**வயிற்றுப் பொருமலுக்கு**

பால் தரும் கால் நடைகளுக்கு அடிக்கடி அதிகப்படியாக வாயு உருவாகி வயிறு பெருத்து விடும். இது அஜீரணம் , பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகளை உட்கொள்வதால் ஏற்படுவதாகும். இதனை உடனே கவனிக்காவிட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம். இதற்கு உடனடி முதல் உதவியாகக் கீழ்க்கண்ட மருந்தைத் தரலாம்.

ஏலக்காய் நான்கு, கிராம்பு ஐந்து, சுக்குப்பொடி பத்து தேக்கரண்டி, ஒரு வெள்ளைப் பூண்டு, கசகசா பத்து தேக்கரண்டி, இவற்றை நன்கு அரைத்து ஒரு கப் வெல்லத்துடன் கலக்க வேண்டும். இதனை ஒரு லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து மூன்று பங்காகக் குறையும் போது எடுத்து ஒரு வேளை தர வேண்டும்.

**கன்றுகளின் உடல் மெலிவிற்கு**

கன்றுகளுக்கு ஊட்டச் சத்து குறையும் போது உடல் மெலியும். அதன் தாடைகளில் வீக்கம் ஏற்படும். தோலின் நிறம் மாறி ரோமங்கள் முறடாகவும் நீளமாகவும் வளரும். அடி வயிறு பெருக்கும். பெரிய மாடுகளுக்கும் இது போல் வரலாம். இதற்கு புரோட்டின் நிறைந்த தீவனம் கொடுக்க வேண்டும். இதற்கான ஏலக்காய் மருந்து.

ஏலக்காய் ஒன்று நான்கு தேக்கரண்டி ஓமம், எட்டு தேக்கரண்டி சுக்குப்பொடி, மிளகாய் வத்தல் 100 கிராம், கிராம்பு ஒன்று, மஞ்சள் பொடி இரண்டு தேக்கரண்டி. கல்யாண முருங்கை இலை ஒரு கைப்பிடி, காட்டு மாங்காய் பட்டை ஒரு கைப்பிடி, மக்காச்சோளம் ஐந்து விதை ஒரு கைப்பிடி, கொப்பரைச் சீவல் இவற்றை நன்கு அரைக்க வேண்டும். இந்த கலவையை ஐந்து பங்காகப் பிரித்து ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் ஐந்து நாட்களுக்குத் தர வேண்டும்.

**மூத்திரத்தில் ரத்தம் சேர்ந்து வந்தால்**

ஏலக்காய்ப் பொடி ஐந்து தேக்கரண்டி, வெள்வேலா மரத்தின் இலைச்சாறு அரைகப், வாழைப்பழம் ஐந்து, இவற்றை நன்கு அரைத்து கால் லிட்டர் தயிரில் கலந்து கொடுக்க வேண்டும்.

**நாய் வாந்தி எடுத்தால்**

நாய்கள் தவறான உணவை உட்கொண்டால் அடிக்கடி வாந்தி எடுக்கும். இதற்கு ஏலக்காயை பொடித்து தேனில் குழைத்துத் தரலாம். ஒரு ஏலக்காயைச் சுட்டு அந்த சாம்பலைத் தேனில் குழைத்தும் தரலாம். ஐந்து ஏலக்காயை ஒரு தேக்கரண்டி சீரகத்துடன் சேர்த்து அரைத்து ஒரு கப் தண்ணீரில் கலந்து அடிக்கடி தர வேண்டும்.

**ஆடுகளுக்கு நோய் எதிர்ப்பு , உடல் வலிமை பெற**

ஏலக்காய், கிராம்பு, பெருங்காயம், இஞ்சி, திப்பிலி ஒவ்வொன்றும் ஐந்து கிராம் வீதம் எடுத்து, பட்டை 30 கிராம், பூண்டு 100 கிராம், வெல்லம் 750 கிராம் ஆகியவற்றை நன்கு அரைத்து ஒரு லிட்டர் மோரில் கலக்கி ஒரு நாள் முழுவதும் ஊற விட வேண்டும். பின் வடிகட்டி 20 கிலோ மக்காச் சோளத்தின் மீது அதனைத் தெளிக்க வேண்டும். இந்த சோளத்தை 100 கிராம் வீதம் ஆடுகளுக்குத் தர உடல் பொலிவு பெறும். எடை கூடும். இந்த அளவு 200 ஆடுகளுக்கு போதுமானது. ஆண்டிற்கு ஒரு முறை இதனைத் தரலாம்.

Dr. Ganesh Hegde,
CP Bazar
Sirsi (Uttara Kannada), Karnataka- 581 401
செல்: 9448995595

நன்றி ; ஸ்பைஸ் இந்தியா – பிப்ரவரி 2017

## மரங்களுக்கு காப்புகட்டும் மாமனிதர்



ஜார்க்கண்ட் மாநிலத்தில் மஹாதேவ்மஹ்தோ என்பவர் பள்ளியிலில் ஆசிரியரகாப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவர் பள்ளியில் பணிபுரியும் காலத்திலிருந்தே மரங்களுக்கு "இரக்ஸபந்தன்" எனப்படும் காப்புகட்டுதலை ஏற்படுத்தி அதை விழாவாகச் செய்து வருகிறார். ஜார்கண்ட் மாநிலம் வனங்கள் அடர்ந்த பகுதியாகும். இங்கு பல ஆதிவாச இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கிராமங்களை ஒட்டியுள்ள வனப்பகுதிக்குச் சென்று அங்கு ஒரு பகுதியைப் பிரித்து அப்பகுதி மரங்களுக்கு "இரக்ஸபந்தன்" கட்டி விழா எடுப்பதை செய்துள்ளார்.

**காப்புகட்டுதல் உருவான வரலாறு**

இவர் தனது சொந்த கிராமமான "பெரோ"வில் ஒரு முறை யானைக் கூட்டம் வந்து விட்டது. இவர் மறைந்திருந்து யானைகள் வருவதைப்பார்த்து வந்தார். இவருக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை. பின்னர் யானைக் கூட்டம் சென்று விட்டது. அப்போது இவருக்கு ஒரு யுக்தி உதயமானது. அதாவது வனத்திலுள்ள மரங்களை வெட்டாமல் பாதுகாப்பது வனவிலங்குகளுக்கு வாழ்வாதாரமாகும். எனவே வனங்களை அழிக்கக் கூடாது. அப்படி மரங்களை பாதுகாக்க காப்புகட்டி பாதுகாத்தால் மக்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள் என நினைத்தார். இதன்படி 1995 ம் வருடம் அக்டோபர் 7 ம் நாள் மரங்களுக்கு சிவப்பு நூல் கொண்டு சுற்றி கட்டும் "இரக்ஸபந்தன்" முறையை அறிமுகப்படுத்தினார். இப்படி மரங்களை எந்தெந்த கிராம மக்கள் காப்புகட்டி பாதுகாக்கிறார்களோ அந்த கிராமத்தில் மக்கள் செழிப்பாகவும், சந்தோஷத்துடனும் இருப்பார்கள் என்ற அனுபவ உண்மையை மக்களுக்கு எடுத்து கூறுகிறார்.

**காப்புகட்டுதல்**



இந்த நிகழ்ச்சி ஒரு நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கிராம மக்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து வனத்தில் அல்லது புறம்போக்கு பகுதியில் காணப்படும் மரங்களுக்கு காப்புகட்டுவார்கள். இதற்கு முன்னர் ஒரு நாள் இக்கிராமத்தில் மக்கள் விழிப்புணர்வு முகாம் நடத்தப்படும். அப்போது கலை நிகழ்ச்சிகளும் நடத்துவர்.

கிராமத்தில் எந்த பகுதியில் காப்பு கட்டலாம் என்று இடம் தேர்வு செய்யப்படும். இதற்கென ஒரு குழு கிராமமக்களால் உருவாக்கப்படும். பின்னர் எந்த நாளில் ‘‘காப்புகட்டுதல் விழா’’ எடுக்கலாம் என முடிவு செய்யப்படும். இங்ஙனம் முடிவு செய்யப்பட்ட வனப்பகுதிக்குச் சென்று அங்குள்ள மரங்களில் சிவப்பு நூல் கொண்டு கட்டுவர். பின்னர் கற்பூர ஆர்த்தியுடன் பூஜை நடைபெற்று கும்பிட்டு செல்வர். உணவும் மக்களுடைய பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்படும். இதில் முஸ்லிம் மக்களும் பங்கு கொள்கிறார்கள். தொண்டு நிறுவனங்கள், வனத்துறை அலுவலர்கள், தன்னார்வலர்கள் பல நபர்கள் கலந்து கொள்கின்றனர். இது வரை சுமார் 500 ஏக்கருக்கும் மேலான பகுதியில் பல ஆயிரக்கணக்கான மரங்களுக்கு காப்புகட்டுதல் நடைபெற்று பாதுகாக்கப்பட்டு வரப்படுகின்றன. இவருக்கு 5/4/2017 அன்று ‘‘சிருஷ்டி சன்மான் விருது’’ புதுதில்லியில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மகாதேவ் மஹ்தோ
பெர்ஹோ, ததி ஜாரிய அஞ்சல்
பிஸ்னுகர்,
ஹாஜரியாக் மாட்டம்
ஜார்க்கண்ட–825313
செல் 9973813959

## பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாக்கும் தேவராவு

கர்நாடக மாநிலத்தில் தட்சனகன்னடா மாவட்டத்தில் திரு. தேவராவு என்ற விவசாயி 154 நெல் ரகங்களை பாதுகாத்து வருகிறார். இவருக்கு வயது 71. இவர் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துள்ளார். இவருக்கு 7 பிள்ளைகள் உள்ளனர். பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாக்க 42 பாத்திகளை அமைத்து ரசாயன உரம், மருந்து இல்லாமல் இயற்கையாக நெல் ரகங்களை சாகுபடி செய்து வருகிறார். இவருக்கு உறுதுணையாக இவருடைய குமாரர் பரமேஷ்வராவு தன்னுடைய இன்ஜினியர் பதவியை துறந்து விட்டு விவசாயத்தை கண்காணித்து வருகிறார்.

கடந்த 35 ஆண்டுகளாக தான் சேகரித்த பலவகையான நெல் ரகங்களை பாதுகாத்து வருகிறார். இவர் 2 பட்டங்களில் நெல் விதைப்பு செய்கிறார். சுமார் 125 – 130 நெல் ரகங்களை மே–ஜுன் மாதங்களிலும், 25–30 ரகங்களை அக்டோபர் மாதத்திலும் நடவு செய்கிறார். 1979 வரை இவரிடம் 40 நெல் ரகங்கள் மட்டும் இருந்தன. அச்சமயம் இவரிடம் அதிகமாக உயர் ரக நெல் வித்துக்கள் இருந்தன. இதற்கு இரசாயன உரம் அதிகம் இட்டதால் நிலம் கடினத்தன்மை ஆனாது. பின்னர் 2000 லிருந்து இயற்கை விவசாயத்திற்கு மாறினார்.

இவரிடம் உள்ள முக்கியமான பாரம்பரிய நெல் ரகங்கள் குலஞ்சிபிள்ளை, சமுங்கா, மீஷபட்டா, கலமே, அடில்கயா, ராஜகயமே, சுக்கிகயமே, தொன்னூர், நவரா, கந்தசாலா, ஏடன்கெல்தி, கிட்டபட்டா, சாஸ்திகா.

இவர் நெல்லை தவிர காய்கறி பயிரிகளில் 40 ரகங்களும், மாமரத்தில் 80 ரகங்களும், பலாமரத்தில் 50 ரகங்களும் வைத்துள்ளார். முன்னோர்கள் உபயோகித்த விவசாய கருவிகளையும் வைத்து பாதுகாத்து வருகிறார்.

இது வரை 18 விருதுகள் பெற்றுள்ளார். இவருக்கு 5/4/2017 அன்று ‘‘சிருஷ்டி சன்மான் விருது’’ புதுதில்லியில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

B.K. Deva Rao
Ameyi house, Mittabagilu PO
Killur, Belthangadi taluka, Dakshinakannada
Karnataka- 574214, Cell : 9448287051,9449368243

## கைத்தறி நெசவில் பாவு போடும் இயந்திரம்



பிராபவின் கலிதா (வயது 54) எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துள்ளார். இவர் மத்திய பட்டு நூல் வாரியத்தில் அஸ்ஸாமில் வேலை பார்த்து வருகிறார். பட்டு புழு கூட்டிலிருந்து நூல் பிரித்து சுற்றும் சமயம் சில சிக்கல்கள் உண்டாவதை கவனித்து வந்தார். இதற்கு ஒரு புதிய கருவியை உருவாக்க முயற்சி செய்து வெற்றி கண்டார். இந்த கருவியை இயக்குவது எளிது. இந்த கருவியின் விலை ரூ. 17,000.



இதனை இயக்கும் சமயம் பெண்கள் கஷ்டப் பட தேவையில்லை. இந்த கருவியின் எடை 50 கிலோ. இந்த கருவியின் பாகங்கள் :50 x 50 MS angle = 30 kg, Bicycle Ring = 1 Nos, Rubber Pipe (1/2")= 1 meter, Nut and bolts (16mm3/4") = 2 kg, Reeling Bobbin (6") =1 Nos, Wooden wheel (6") = 2 Nos, Plastic Bobbins (10") = 4 Nos, Cocoon Tray = 1 meter, Pulley (6") = 2 Nos, Peddle = 1 Nos, Iron Rod = 10 kg, Screw = 1 Nos, Base Plate = 1 piece.

Prabin Kalita
Central Silk Board
Boko, Kamrup,Assam – 781123, Cell : 9854748661

## மூன்று சக்கர டிராக்டர்



குஜராத் மாநிலத்தில் அம்ரேலி மாவட்டத்தில் உபேந்திர ரதோட் என்ற விவசாயி 3 சக்கர டிராக்டரை உருவாக்கியுள்ளார். இதன் விலை ரூ. 60,000 – 1,40,000 வரை பல இணைப்புகளுடன் விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறார். இதற்கு "சானெடோ" என்று பெயரிட்டுள்ளார். இது ரிவர்ஸ் கியருடன், ஹைட்ராலிக் (Hand hydralic) குடன் பயிர்களுக்கு பூச்சி மருந்தையும் தெளிக்கலாம். இது விவசாயிகளுக்கு உழுதல் முதற் கொண்டு பலவகையான வேலைகளுக்குப் பயன்படுத்தலாம். நல்ல மைலேஜுடன், காளைமாடுகள் பயன்படுத்துவது போன்று அனைத்து விவசாய வேலைகளுக்குப் பயன்படுத்தலாம். இது டீசலில் ஓடும்.

**கண்டுபிடிப்பு விவரம்**

திரு. உபேந்திர ரதோட் 2000 ம் ஆண்டில் இந்த 3 சக்கர டிராக்டரை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தார். முதலில் பழைய புல்லட் மோட்டார் சைக்கிள்களை வாங்கி அதில் வடிவமைத்து கொடுத்தார். 200 மோட்டார் சைக்கிள்களில் வடிவமைத்து கொடுத்துள்ளார். புல்லட் மோட்டார் சைக்கிளில் டயர்கள் அடிக்கடி ஸ்லிப் ஆவதால் டிராக்டரில் உள்ளபடி வலுவான டயர்களை 2 பின் சக்கரங்களுக்கும் பொருத்தி பார்த்தார். இந்த வலுவான சக்கரங்களை உபயோகிக்கும் சமயம் பருத்தி பயிரில் அதன் தண்டுகள் ஒடிய வாய்ப்பிருந்தது. இதற்காக பெரிய வடிவில் விசிறியைப் பொருத்தி தண்டுகள் ஒடிவதைத் தவிர்த்தார். இதில் விவசாய வேலைகளைப் பார்க்க 2 நபர்கள் தேவை.

இதன் செயல்பாடுகளைப் பார்த்து திருப்தியடைந்த விவசாயிகள் இந்த 3 சக்கர டிராக்டரை வாங்க அதிகளவில் முன் வந்தனர். ஆனால் மார்க்கெட்டில் பழைய புல்லட் மோட்டார் சைக்கிள் கிடைக்கவில்லை. இதனால் புதிதாக பாடி பில்டிங் செய்து 71/2 ஹெச்.பி மோட்டார் பொருத்தி செய்ய ஆரம்பித்தார். முதலில் ரிவர்ஸ் கியர் முறையில் வடிவமைத்ததில் அடிக்கடி பழுதுபார்க்க வேண்டிய சூழல் உருவானது. இதற்கு பதில் மாருதி வேன் கியரைப் பொருத்தி வெற்றியடைந்தார். பின்னர் "கை"(Hand) ஹைட்ராலிக்கிலிருந்து ஆயில் ஹைட்ராலிக் முறைக்கு மாறியதால் இதனை இயக்குவது இலகுவானது. பின்னர் 7.5 ஹெ.ச்.பியிலிருந்து 10 ஹெ.ச்பிக்கு மாறினார். டிராக்ட்டரை இயக்க செல்ப் ஸ்டார்ட்டர் முறைக்கு மாற்றி மேலும் எளிதாக்கினார். பின்னர் பிரஸ்ஸர் பம்ப் மற்றும் தெளிப்பானை இணைத்து பயிர்களுக்கு மருந்து தெளிப்பதை எளிதாக செய்யலாம் என்பதை செய்து காட்டினார். இதனால் தெளிக்கும் நேரம் குறைந்தது. சுமார் 5 ஏக்கர் நிலத்திற்கு 2 மணி நேரத்தில் இதன் மூலம் தெளிக்க முடியும். இந்த டிராக்டரை இயக்க டீசல் உபயோகப்படுத்துவதால் ஓர் ஏக்கருக்கு ரூ.20–30 வரை மட்டும் டீசல் செலவாகும். இந்த கருவியின் செயல்பாடு நன்றாக இருந்ததால் இதனை வடிவமைக்க 30 நபர்கள் முழு நேரப்பணியில் ஈடுபட்டனர். ஆனால் தற்சமயம் 150 நபர்கள் இதில் வேலை செய்கின்றனர். இது வரை 1200 டிராக்டர்களை விற்றுள்ளார். இத்தனைக்கும் தனது சொந்த கிராமமான சிட்டவில்தான் இதற்கான பட்டறை உள்ளது. இந்த ஊரில் 20,000 மக்கள் வசிக்கின்றனர். இந்த ஊரில் மட்டும் சுமார் 2000 விவசாயிகள் இந்த டிராக்டரைப் பயன்படுத்துகின்றனர். மாடு வைத்து உழவு செய்பவர்களில் 10 நபர்கள் தவிர அனைவரும் இந்த புதிய கருவியைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த டிராக்டரை பதிவு செய்து விற்பனை செய்ய முயற்சி எடுத்து வருகிறார். இதனை டிராக்டர் என்று கூறாமல்

''விவசாய பல் திறன் கருவி'' என்று பதிவு செய்ய உள்ளார். இதற்கு லைசன்ஸ் கிடைத்து விட்டால் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்றுமதி செய்ய நல்ல வாய்ப்புண்டு எனக் கூறுகிறார்.

இவருடைய கண்டுபிடிப்பு முயற்சியைப் பாராட்டி இவருக்கு 5/3/2017 அன்று சிருஷ்டி சன்மான் விருது சிருஷ்டி நிறுவனத்தால் புதுடெல்லியில் ''ராஷ்ட்ரபதி பவனில்'' வழங்கப்பட்டது.

Upendra Rathod
Rathod Agro Industries
Chital, Amreli District, Gujarat.
Cell : 7046245380

## கம்பு இரகத்தை பாதுகாக்கும் குடும்பம்



ஹனமனராம் (52) இராஜஸ்தானில் ''சுரு'' மாவட்டத்தில் சுல்கானியா என்ற ஊரில் வசித்து வருகிறார். இவர் கடந்த 40 ஆண்டுகளாக பாரம்பரிய உயர் விளைச்சல் ரகம் ஒன்றை பயிர் செய்து வருகிறார். இவருக்கு சொந்தமாக 10 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 5 ஏக்கரில் விதை உற்பத்திக்காகவும் மீதி உணவுப்பயிருக்காகவும் பயிருட்டு வருகிறார்.

இந்த கம்பு பயிரின் கதிர் அதிகமான நீளம் (3 –4 அடி) கொண்டதாக உள்ளது. இந்த பயிரின் முக்கிய அம்சங்கள்:

ஹெக்டருக்கு 20–25 குவிண்டால் மகசூல், கதிரின் நீளம் 60–90 செ.மீ., வயது 4 மாதங்கள், வறட்சி தாங்கும், நல்ல தரமான மணிகள் மற்றும் கால்நடைகளுக்கு தீவனதட்டை கொண்டதாக உள்ளது, தீவனத்தட்டை சற்று இனிப்பானதாக இருக்கும்.

இவர் இந்த பாரம்பரிய விதைகளை தனது பிக்கானேர் குடும்பத்தில் தனது முன்னோர்கள் ஒரு சாமியாரிடமிருந்து 250–300 வருடங்களுக்கு முன் பெறப்பட்டு பல தலை முறைகளாகப் பயிர் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருவதாகக் கூறுகிறார்.

Hanumanaram
Sulkhaniya, Ratangarh
Chiru – 331022
Rajasthan
Contact Cell (Dr. Ashinal) : 9887728044

## குஜராத் மாநில உத்திகள்

### இயற்கை பயிர் பாதுகாப்பு கரைசல்

குஜராத் மாநிலத்தில் சோடா உதேபூரில் நனிமன்கோடி ஊரில் ரவி தாஸ்பாய் ராம் தாஸ்பாஸ் ரவ்தா என்ற விவசாயி பயிர்களுக்கு பூஞ்சான நோயிற்கும், சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கும் கீழ்க்கண்ட தயாரிப்பு முறையைப் பின்பற்றி வருகிறார். வேப்பஇலை – 5 கிலோ, எருக்கு இலை 2 கிலோ, அரளி இலை – 1 கிலோ, தழுதாழை என்ற வாதமடக்கி இலை – 1 கிலோ, ஆடாதொடை – 1 கிலோ, சோற்றுக் கற்றாழை – 1 கிலோ அனைத்தும் துண்டுகளாக வெட்டி பின் இடித்து 25 லிட்டர் மாட்டு கோமியத்தில் 15 நாட்கள் ஊற வைக்க வேண்டும். இத்துடன் வெந்தயத்தூள் சேர்க்க வேண்டும். பின்னர் இதை வடிகட்ட வேண்டும். வடிகட்டிய கரைசலுடன் புளித்த மோர் (15 நாட்கள் புளித்தது) சேர்க்க வேண்டும். இந்த கரைசலிலிருந்து 1 லிட்டர் எடுத்து 15 லிட்டர் நீரில் கலந்து 2–3 தடவை ஒரு வார இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

நன்றி – தேனீ – 27307

### பருத்தி பயிர் பாதுகாப்பு

பருத்தியில் வெள்ளை ஈ மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த கன்மாய் பகுதியில் காணப்படும் நெய்வேலி காட்டமணக்கு 1 கிலோ, புகையிலை – 500 கிராம், மருதோன்றி இலை – 200 கிராம், இவைகளை இடித்து டிரம்மில் போட வேண்டும். இத்துடன் 1 லிட்டர் கோமியம், 30 லிட்டர் நீர் சேர்த்து 7–10 நாட்கள் புளிக்க விட வேண்டும். பின்னர் வடிகட்டி பயிருக்கு 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். இந்த கரைசலை 10 லிட்டர் நீருக்கு 250 மி.லி சேர்த்து தெளிக்கலாம். பூரிபென் மாதவலால் பாய், பர்சா, காந்திநகர் மாவட்டம் .

நன்றி – தேனீ – 27308

**பருத்தி காய்ப்புழுவிற்கு**

பருத்தியில் இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும் காய்ப்புழுவிற்கு வேப்பங்கொட்டை இடித்தது 5 கிலோ, பூவங்கொட்டை தூள் 500 கிராம், மாட்டு கோமியம் 10 லிட்டர் சேர்த்து 6 நாட்கள் ஊற வைத்து வடிகட்டி 250 மி.லி எடுத்து 15 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். தெளிப்பதை காலை அல்லது மாலை வேலையில் செய்ய வேண்டும். இதனை வெண்டைச்செடியில் அடித்துப் பார்த்த போது நல்ல பலன் கிடைத்ததால் பருத்திச் செடிக்கும் தெளித்து வருகிறார் திரு. நாக்ஜிபாய் சகன்பாய் டெட்ரோஜா .

நன்றி – தேனீ – 27309

**பருத்தி பயிர் பாதுகாப்பு**

பவநகர் மாவட்டத்தில் தடாவாட் கிராமத்தில் திரு. பூபத்பாய் வேலாபாய் கோகில் விவசாயி பருத்திப்பயிருக்கு நோய், பூச்சிகள் வராமல் இருக்க கீழ்கண்ட முறையை கடைபிடித்து வருகிறார்.

கம்புமாவு 5 கிலோ எடுத்து 10 லிட்டர் நீரில் 1 மாதம் ஊற வைக்க வேண்டும். இத்துடன் 10 நாள் புளித்த மோர் சேர்க்க வேண்டும். பின்னர் வடிகட்டி 300 மி.லி. எடுத்து 15 லிட்டர் நீரில் சேர்த்து தெளிக்க வேண்டும்.

நன்றி – தேனீ – 27310

## மாணவர்களை உற்சாகப்படுத்த விருதுகள்

(Inspire - MANAK Awards)

Innovation in Science Pursuit for Inspired Research (INSPIRE)

Million minds augmenting national aspiration and knowldedge (Manak)

பள்ளியில் 10–32 வயதுள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இவர்களுக்கு போட்டி நடத்தப்படுகிறது. இதன்படி தங்களிடமுள்ள புது யோசனைகள், உத்திகளை தெரிவு செய்யலாம். இதில் இந்தியாவிலுள்ள அனைத்து பள்ளிகளும் கலந்து கொள்ளலாம். ஒவ்வொரு பள்ளியிலிருந்து கண்டுபிடிப்புகள் அல்லது உத்திகளைக் கூறும் 2 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர். பின்னர் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் தேர்வு செய்யப்பட்டு கடைசியில் தேசிய அளவில் 50 நபர்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படும். இதனை மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையும், தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையும் இணைந்து 2010 லிருந்து செயல்படுத்துகிறது.

**தொகுப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி**

National Innovation Foundation - India
Satellite Complex , Premchand Nagar Road
Ahmedabad – 380 015 , Gujarat ,
Ph : 079 – 267302456 , 267302095
Email - campaign@nifindia.org.

**களர் நிலத்தில் விளையும் உயர் ரக பசுமதி நெல்**

ஹரியானா மாநிலத்தில் பிராஸ் கிராமத்தில் சுர்ஜித்சிங் (62) விவசாயி "சுர்ஜித் பசுமதி – 1" என்ற புதிய நெல் ரகத்தை உருவாக்கியுள்ளார். இவர் 2000 ல் "பூசா 1460" என்ற நெல் ரகத்தை நிலத்தில் நடவு செய்திருந்தார். இதில் இலை கருகல் நோய் உண்டானது. இந்த வெள்ளாமையில் ஒரு பயிர் மட்டும் நோய் தாக்குதலின்றிருந்தது. இதனை தனியாக அறுவடை செய்து அடுத்தடுத்து பயிர் செய்ததில் தனி சிறப்பம்சங்களுடன் திகழ்ந்தது.

இதன் சிறப்பம்சங்கள்:

விளைச்சல் 24 குவிண்டால் / ஏக்கருக்கு, களர்பூமியில் தாக்கு பிடித்தது, வேர் அழுகல் நோய் தாக்குதல் இல்லை. இவர் பி.ஏ 2ம் ஆண்டு வரை படித்துள்ளார். இவர் தனது நிலத்தில் கோதுமை, பட்டானி, கடுகு, உருளைக்கிழங்கு, உளுந்து, தக்காளி பயிர் செய்து வருகிறார். இவருக்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் கண்டுபிடிப்பாளர் விருது கிடைத்துள்ளது.

Surjeet Singh
VPO- Brass, Tehsil - Nissing., Karnal District
Haryana - 132 001, Cell : 9813470484, 9355555029

## அடித்தள கண்டுபிடிப்புகள் விழா

தேசிய அளவிலான 9 வது அடித்தள கண்டுபிடிப்பு மற்றும் பாரம்பரிய அறிவு வெளி கொண்டுவந்தவர்களுக்கான விருது வழங்கும் விழா, புது டெல்லியில் 4/3/2017 ம் தேதி அன்று காலை 10. 00 மணிக்கு துவங்கியது. இவ்விழாவில் குடியரசு தலைவர் திரு. பிரனாப் முகர்ஜி அவர்கள் கலந்து கொண்டு விருதுகள் வழங்கினார். அதனை தொடர்ந்து கண்காட்சியையும் தொடங்கி வைத்தார். கண்காட்சியில் புதிய கண்டுபிடிப்புகளை வெளிபடுத்தும் வகையில் 60 கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழகத்திலிருந்து வந்திருந்த 6 பேருக்கு விருதுகள் கிடைத்தன. அதில் சேவா மூலம் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுகா புலுவாய் கரை அஞ்சல், மணக்குளம் கிராமத்தை சேர்ந்த முத்துலெட்சுமி விருது கிடைத்தது. 5/3/2017 ம் தேதி

நடைபெற்ற சிஷ்டி சன்மான் விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சேவா தொகுத்த கேரள மாநிலம், வயநாடு மாவட்டம், நெல்லரச்சு கிராமம் வெள்ளனுக்கும் கேரளா மாநிலம் இடிக்கி மாவட்டம், வாத்திகுடி கிராமம் அன்னகுட்டி ஜோசப்பிற்க்கும் விருது கிடைத்தது.

## வாசகர் வட்டம்

நான் கடந்த 12 ஆண்டுகளாக நம் வழி வேளாண்மைக்கு சந்தாதாரராக இருக்கிறேன். என்னிடம் 18 நாட்டு மாடுகளும் 40 ஜமுனாபாரி, தலைச்சேரி ஆடுகள் உள்ளன. இவற்றிற்கு கழிச்சல் ஏற்பட்டால் வெந்தயம், சீரகம், கசகசா சிறிது எடுத்து வறுத்து தூளாக்கி உள்ளே தருவேன். இதனால் கழிச்சல் நின்றுவிடும். ஆடு, மாடுகளுக்கு மூக்கடைப்பு ஏற்பட்டால் பின்னர் காய்ச்சலும் வரும். இதற்கு கண்டங்கத்திரி பழுத்த பழம் 2 எடுத்து சாறு எடுக்க வேண்டும். இதனை மூக்கில் பிழிந்து விட வேண்டும். உள்ளே கொள்ளு வேக வைத்த நீரை( கொள்ளுத் தண்ணீர்) தர வேண்டும். நான் 20 ஏக்கரில் தென்னை சாகுபடி செய்து வருகிறேன். 5 ஏக்கரில் சோளம் மற்றும் மாட்டுத் தீவனம் பயிர் செய்து வருகிறேன். 2003 ம் வருடம் முதல் இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய மூத்த மகன் விக்ரம் முத்து ரத்தினசபரி எனக்கு விவசாயத்தில் உறுதுணையாக இருக்கிறார். நாங்கள் கடைபிடிக்கும் சில உத்திகள் பின்வருமாறு:



**உண்ணி நீக்க**

வசம்பை பொடி செய்து கொண்டு வேண்டிய அளவு தண்ணீரில் கலந்து ஆடு மற்றும் குட்டிகளுக்கு தேய்த்து விட்டால் உண்ணி நீங்கி விடும். இவர் ஆடு ஈன்றதும் ஆட்டுக்கும் குட்டிக்கும் வசம்பு கலந்த கலவையை தெளித்து விடுவதால் உண்ணி வருவதற்கு வாய்ப்பில்லை. இம்முறையை கடந்த 5 வருடங்களாக பின்பற்றி வருகிறேன். மாடுகளுக்கும் இந்த முறையை பின்பற்றி வருகிறேன்.

**கழிச்சலுக்கு**

சாய்தழை 5 (நடுத்தரஇலை) மாவிலங்கம் பட்டை இரண்டையும் சம பங்கு எடுத்து அரைத்து சுடு தண்ணீரில் கலந்து ஆடுகளுக்கு ஒரு நேரத்திற்கு 50 மி.லி. வீதம் 2 நேரம் கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு 100 மி.லி. வீதம் கொடுக்க வேண்டும்.

**கோமாரி நோய்க்கு**

வேப்ப இலை, மஞ்சள், சின்ன வெங்காயம் மூன்றையும் சம பங்கு எடுத்து அரைத்து இரண்டு வேளை போட வேண்டும்.

**வயிறு உப்பிசத்திற்கு**

முதலில் பெருங்காயத்தை வாழைபழத்தில் வைத்து கொடுக்க வேண்டும். சிறிது நேரம் கழித்து கடலை எண்ணெய் (100 மி.லி) கொடுக்க வேண்டும். மாடுகளுக்கு 100 கிராம் பெருங்காயமும் 250 மி.லி கடலை எண்ணெய் கொடுக்க வேண்டும். முதலில் கழிச்சல் ஏற்பட்டு வயிறு உப்பிசம் நீங்கிவிடும்.

மோகனசுந்தரி
C/o. எஸ். விக்கரம் முத்து ரத்தினசபரி
ராமசந்திரபுரம், சின்னப்பன்பாளையம்
ஆனைமலை – 642104, பொள்ளாச்சி தாலுகா
கோயம்புத்தூர், செல் : 9842648484

**ஆட்டுகழிச்சலுக்கு வெந்தயம்**

வெந்தயம் 2 ஸ்பூன் எடுத்து ஆட்டுக்கு உள்ளே கொடுத்து விட்டால் கழிச்சல் உடனே நிற்கும். உடம்பிற்கு சூடு தனியும். குடற்புழுவும் அழிந்து விடும்.

என். பொன்னுசாமி, வைத்தியர் (விஞ்ஞானி)
ஓடைப்பட்டி, அம்பிளிக்கை வழி
ஒட்டன்சத்திரம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

**சினைபிடிக்காத மாடுகளுக்கு**

பீகார் மாநிலத்தில் சமஸ்திபூர் பகுதியில் மாடுகள் ஜனவரி மாதம் பருவத்திற்கு வரும். இதனால் சினைபிடிக்காத மாடுகளுக்கு அக்டோபர் மாதத்திலேயே வைத்யம் செய்ய ஆரம்பித்து விடுவோம். அக்டோபர் மாதத்தில் மாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்ய மருந்து கொடுக்க வேண்டும். மூலிகை மருந்தாக சோற்றுக்கற்றாழை அல்லது பட்டோஸ் இலையை சுண்ணாம்பு வைத்து அரைத்து உள்ளே தர வேண்டும். பின்னர் கடுகு பிண்ணாக்கை 300 கிராம் நீரில் 4 மணிநேரம் ஊற வைத்து குடிக்க விட வேண்டும். இதனை சினை ஊசி போடும் வரை கடைபிடிக்க வேண்டும் . சினை ஊசி போட்ட பின் கடுகு பிண்ணாக்குத்

தருவதை ஒரு வாரம் நிறுத்தி விட வேண்டும். நித்தமும் கடுகு பயிரை பச்சை தீவனமாக 10 கிலோ தர வேண்டும். மாடு பருவத்திற்கு வந்து விட்டால் சினை ஊசி போடும் முன்னர் கடுகு பிண்ணாக்கை (500 கிராம்) 2 லிட்டர் நீரில் வேக வைத்து உள்ளே தர வேண்டும். இதை ஒரே தடவை மட்டும் செய்ய வேண்டும். சினை ஊசி போட்ட பின்னர் நித்தமும் வில்வப்பழத்தை வெட்டி தீயில் வாட்டி மாடுகளுக்கு கொடுத்தால் ஜீரணசக்தி கூடும். இதனை 1 வாரம் தொடர்ந்து செய்து வர வேண்டும். சினைக்கு போட்ட பின் 1 வாரத்திற்கு கடுகு பிண்ணாக்கு கொடுப்பதை நிறுத்தி விட வேண்டும்.

மாடுகளுக்கு அடர்தீவனமாக மக்காச்சோளம் (800 கிராம்), லென்டில் என்ற பயறு (200 கிராம்) சேர்த்து அரைத்து கொடுக்க வேண்டும். எங்களுக்கு சொந்தமாக 3 மாடுகள் உள்ளன. இந்த முறையை என்னுடைய மாடுகளில் கடைபிடித்து நல்ல பலன் கிடைத்துள்ளது.

**மாடு வயிறு ஊதியிருந்தால்**

ஒரு எலுமிச்சம்பழத்தை அறுத்து சப்பாத்தி ரொட்டியில் வைத்து இத்துடன் ஓமம் 10 கிராம் சேர்த்து மடித்து உள்ளே தர வேண்டும். இதை கொடுத்த 1/2 மணி நேரத்தில் வாயு வெளியேறிவிடும்.

ரவி கிருஷ்ணாசிங்
தமோதாபூர் ,சமஸ்திபூர் மாவட்டம், பீகார்
செல்: 9472538674

## அரிதாகி வரும் கடம்பமரம்



மதுரையில் கடம்பவனம் இருந்ததாக கூறுவது உண்டு. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் கடம்பமரம் ஸ்தலவிருச்சமரமாகும். இந்த மரமும் பட்டுவிட்டது. கோயிலில் பட்டமரமே உள்ளது. மதுரையில் கடம்பீஸ்வரர் கோயில் சன்னதியில் மட்டும் கடம்பமரம் ஒன்று மட்டும் உள்ளது. இந்த கோயில் மீனாட்சி அம்மன் கோயில் நிர்வாகத்தில் உள்ளது. இந்த மரம் கோயில் கட்டப்பட்ட சமயத்திலிருந்து ( 150– 200 வருடங்களுக்கு முன்) இருக்கலாம் என்று கூறுகின்றனர். மரத்தின் வயது சுமார் 60 வருடங்களுக்கு அதிகமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இம்மரமும் 10 வருடங்களுக்கு முன் அநேகமாக பட்டுவிட்டதாம். ஆனால் 2004 ல் இந்த கோயிலில் உள்ள ஆக்கிரமிப்புகள் (சில நபர்கள் எருமை மாடு கட்டியிருந்தனர்) அகற்றப்பட்டு கும்பாபிசேகம் நடத்தப்பட்டது. அதிலிருந்து பட்டமரம் தழைத்துவிட்டதால் மரம் கிளை எடுத்து பூத்து காணப்படுகிறது. இந்த கோயிலில் சிவன், பார்வதி, விநாயகர், முருகன், நந்தி சிலைகள் உள்ளன. ஒவ்வொரு பிரதோசத்திலும் இந்த கோயிலில் பூஜை நடைபெறுகிறது.

– சாமிநாதன், சேவா, மதுரை

## அடித்தள கண்டுபிடிப்புகளை பரவலாக்கும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்



சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் டிசம்பர் மாதம் 28, 29 2016 தேதிகளில் நடைபெற்றது. இதில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் (சிதம்பரம் தெச்சணாமூர்த்தி, விஜயமங்கலம் செந்தில், காட்டுமன்னார்கோவில் லதா, அமிர்தா மூலிகை மருந்து உற்பத்தி குழு உறுப்பினர்கள் கலைச்செல்வி, ஜெகதீஸ்வரி) மற்றும் சேவா விவேகானந்தன் கலந்து கொண்டனர். படம் : கண்காட்சியை கடலூர் மாவட்ட ஆட்சியர் பார்வையிடும் காட்சி.